87

REGISTERED No. M. 6165. அறு. 2

87
3-56

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

[illegible] 1956.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1958
MADRAS

விஷயம்	பக்கம்.
இறைவனையே நம்பி உயிர் வாழ்வோம்	1
நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்	9
இஸ்லாமிய சரித்திரச் சாரம் (T. F. R. மஆலி ஸாஹிப்-பாகவி)	13
திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி)	19
சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர்	27

[illegible] இஸ்லாம் ஆபீஸ் :
[illegible]றரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

SC
[illegible]
[illegible]
182053

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்:	இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு		
	வருஷ சந்தா	ரூ.	1–8–0
	தனிப் பிரதி	அணா.	0–2–0
	மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

இரத்தச் சின்னம்

இது திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு துப்பறியும் நாவல்.

சிரச்சேதம் செய்யப்படுவதினின்று சீர்கெட்ட குற்றவாளி யொருவன் தற்செயலாகத் தப்பிப் பிழைத்திராவிடில், இரத்தச் சின்னம் என்னும் இரகசியக் குழு இயங்கத் துவங்கி இராது. நீதி பரிபாலனத்தில் பரிதவிக்கத் தக்க முறையில் நிகழ்ந்த இந்த அசம்பா விதத்துக்குச் சில வருடங்களுக்குப் பிறகு இரக்க சிந்தையற்றவனொருவன் இங்கிலாந்தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடலானான். தீர்க்க ஆலோசித்து திட்டமிட்டுத் திறமையோடும் தீரத்தோடும் செயலாற்றுவதன் மூலம் தனக்கு உதவியாளர்களாக ஏராளமான ஆட்களைச் சேகரித்துக் கொண்டான் அவன். ஒருவருக்கொருவர் பரஸ்பர பழக்க மில்லாமலும் அறிமுக மில்லாமலும் அதியற்புதச் செயல்கள் புரிந்த இந்த இரகசியக் குழுவிற்குத் தலைமை தாங்கிய மர்ம மனிதன் இரத்தச் சின்னம் என்று கையெழுத்திட்டான்.

அவனின் மர்ம இரகசியத்தைக் கண்டு பிடித்தல் மிக ஆச்சரியமானது

இதன் விலை ரூ. 1—4—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கே. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்

ஜுலை—1956.

இறைவனையே நம்பி உயிர் வாழ்வோம்.

“(எல்லாம் வல்ல) இறைவன், ஜீவியத்தையும் மரணத்தையும் படைத்தது எதற்கெனின் (‘முஸ்லிம்களே,) உங்களில் அனுஷ்டானத்தால் நல்லவர் யார்? தீயவர் யார்?’ என்பதை சோதித்து அறிவதற்கேயாகும்”. (திருக் குர்ஆன்)

இப்பரந்த பேருலகமாகிய பிரபஞ்சம், மனிதரும் ஜீவஜந்துக்களும், இங்கேயே சதா ஜீவித்துக் கொண்டு இருந்து விடுவதற்காக ஏற்பட்ட ஸ்தலமல்ல. “குல்லு நப்ஸுன் தாயிகத்துல் மவுத்” அதாவது ‘ஒவ்வொரு உயிரினமும் மரணத்தின் ருசியை நுகர்ந்தே ஆக வேண்டும்’ என்பதற்கேற்ப, எறும்பு முதல் யானை திமிங்கலம் வரை, மரணித்து மாண்டு மறைந்து போக வேண்டியதேயாகும்.

இவ்வாறே, உயிரினங்களி லெல்லாம் மிகச் சிறந்த சிருஷ்டியாகிய மாந்தருக்கும் இறைவன் இதே நியதியைத்தான் ஏற்படுத்தி வைத்துள்ளான். எளியோனாயினும் வலியோனாயினும், கறுப்பனாயினும் வெள்ளையனாயினும், தனவந்தனாயினும் ஏழையாயினும், ஆண்டிப் பக்கீராயினும் நாடாளும் பாதுஷாவாயினும், ஒரு நாளைக்கு மரணமென்னும் கசப்பு பானத்தைப் பருகி, என்றுமே உலகில் விழிப் பில்லாத நீள் நித்திரையில் ஆழ்ந்துப்போக வேண்டியவராவர். ஆதலின்

இப்பிரபஞ்ச வாழ்வு யாவர்க்கும் மிகச் சொற்ப காலேயாகும். இதை உணர்ந்து கொள்வது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். உலகம் சோதனை நிறைந்த ஓர் ஸ்தலம். இப்பூவுலகில் யாரும் எவரும் தம் இஷ்டம் போல் ஜீவித்து வாழ்வ தென்பது முடியாத காரியம். மாந்த ரெல்லோரும் இத்தரணியில் பிறந்து உயிர் வாழ்வதே, சிருஷ்டி கர்த்தனாகிய அல்லாஹு தஆலாவுடைய நாட்டப்படியும் கற்பனைக் கலா-கத்ர் படியும் சோதனைகளுக்குள்ளாகி சொற்ப நாள் வாழ்ந்து நற் பெயர் பெற்றுச் செல்வதற்காகவே யாம்.

உலகம் இரட்டைத் தன்மை யுடையது. அதாவது எதிர் மறையான இரண்டுவிதக் கோட்பாடோ, இரண்டுவிதப் பலாபலனோ பெற்றே மாந்தன் வாழ வேண்டியவனாக இருக்கின்றான். உதாரண மாக, இரவும் பகலும், வெய்யிலும் நிழலும், சூரியனும் சந்திரனும் மாறி மாறி வருவதே போல், மனித வாழ்வில் சுகமும் துக்கமும், நலனும் இடரும், மாறி மாறியே வந்து கொண்டிருக்கும். எனவே யாரும் உலகில் எப்போதும் சந்தோஷப்பட்டுக் கொண்டு சுகா னந்த வாழ்வு வாழ்ந்து விடமுடியாது; இவ்வாறே சதா சர்வ காலமும் கஷ்ட நஷ்டப்பட்டுக் கொண்டே நலிந்துப் போவதும் இல்லை. சில சமயம், மனதுக்கு சஞ்சலங்களும் அமைதிக் குலைவுகளும் ஏற்பட்டுக் கொண்டு இருக்கும். இவ்வாறே சில சமயங்களில் அத்துக்கங்களும் சஞ்சலங்களும் நீங்கி, தெளிந்த வானம் போல், மாந்தரின் வாழ்விலும் அமைதியும் சமாதானமும் நிலவி இருப்பது வழக்கம்.

இங்ஙனம் நம் வாழ்க்கையில், சுகதுக்க மாறுபாடுகள் ஏற்படு வது கொண்டும், சோதனைகள் உண்டாவது கொண்டும், அறிவுடைய வர்கள் மனம் நலிந்துப் போவது கூடாது. அறிவுடைய மாந்தர்க்கு இறைவன் மீது அதிக நம்பிக்கையும் உறுதியான ஈமானும் இருக் கும். சுகத்தைக் கண்டு அவர்கள் அகந்தை கொண்டு விட மாட் டார்கள். துக்கத்தைக் கண்டு அவர்கள் மனம் சலித்துப்போக மாட்டார்கள்.

சுகம் வந்துற்ற போது, இந்த ஆனந்தமும் வைபோகமும் சதா இருந்து கொண்டே இருக்கு மென்று நம்பி ஏமாந்து விடக் கூடாது. சஞ்சலமும் துக்கமும் வந்துற்ற போது, இவை என் றென்றும் இருந்து நம்மை வாட்டிக் கொண்டே இருக்கு மென்று மனச் சோர்வும் அடைந்து விடக் கூடாது.

[library stamp] 17083

அல்லாஹ்வின் நல்லடியார்களாகிய உத்தமர்களுக்கே உலகில் அதிக சோதனைகள் ஏற்படுவதுண்டு. அதற்காக அவர்கள் மனம் சலித்துப் போக மாட்டார்கள். இந்த தெய்வ சோதனை தங்களுடைய நன்மைக்காகவே நேரிடுகின்றன வென்று அவ்வுத்தமர்கள் மனம் பொறுத்து, ஆத்மத் திருப்தி யடைவார்கள். இறுதியில் அதனால் அவர்கள் மேன்மையான பதவிகளையும் உத்தமமான ஸ்தானங்களையும் பெறுவார்கள்.

இதற்குப் பிரதம உதாரணம்-நமது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் புனித ஜீவியமே போதுமானதாகும். எம்பெருமானார் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் உலக வாழ்வில் பட்ட கஷ்ட நஷ்டம் போல், அடைந்த துன்பங்கள் போல், உலகில் வேறெவரும் அனுபவித்திருக்க முடியாது. எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பால்யகாலம் முதற் கொண்டு, மதீனா வாழ்வில் அந்திம காலம் வரை சோதனைக்குட்பட்டு, துன்ப வாழ்வே வாழ்ந்து வந்தார்கள். ஆயினும், நபி பெருமானார் (ஸல்) அவர்கள் இத்துன்பங்களையும் சங்கடங்களையும் கண்டு மனம் சலிக்கவில்லை; முயற்சியில் சோர்ந்து விடவில்லை; இறைவனுடைய இச்செயல் கண்டு, குறை கூறவும் இல்லை; விதிவசம் என்னும் 'கலா-கத்ரு' பற்றி தர்க்க வாதம் பேசவும் இல்லை.

இதே மாதிரி தான் ஆதி பிதா பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் முதல் ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் வரையில், எல்லா நபிமார்களும்-ரஸூல்மார்களும், சொல்லொணாக் கஷ்டங்களை அடைந்தார்கள்; சோதனைக்கு உட்பட்டார்கள். ஒருவர் சுவர்க்கத்தி லிருந்து வெளியேற்றப்பட்டு மண் உலகில் தள்ளப்பட்டார். மற்றொருவர், காடு மலையில் இருந்து கஷ்டப்பட்டார். மற்றொருவர் நோய் வாய்ப்பட்டு உடம்பெல்லாம் புண்ணாய் புழுத்து சொல்லொணாத் துயர் உற்றார். இன்னொருவர் விரோதிகளினால், மரம் அறுக்கும் வாளினால் தலையி லிருந்து கால் வழியே இரண்டு துண்டாய் அறுக்கப்பட்டு நலிந்தார்; இன்னொருவர் சுடர் விட்டெரியும் நெருப்புக் கிடங்கில் தள்ளப்பட்டார். இன்னொருவர் அருமைப் பிள்ளையை இழந்து அழுது அழுது கண்ணொளி மயங்கிக் குருடரானார்...இறுதியாய் ஒருவர் சிலுவை என்னும் தூக்கு மரத்தில் அறையப்பட்டார்.

இதெல்லாம் ஆண்டவனுடைய நல்லடியார்களாகிய நபிமார்களுக்கு ஏற்பட்ட சோதனைகளாகும். இவைகளி லிருந்து என்ன பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்; நாம் நன்கு யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு நல்லவர்க்கு, ஓர் உத்தமர்க்கு, தொழுது வணங்கும் நல்லடியார்க்கு கஷ்டங்களும் துன்பங்களும் வந்தணுகினால், அவரை ஆண்டவன் கோபித்துக் கை சோர்ந்து விட்டான் என்று சில பேர் நினைத்துக் கொள்கிறார்கள். இது தவறான எண்ணம். நல்லடியார்களான உத்தமர்களில் யாரை ஆண்டவன் சோதிக்க வேண்டுமென்று கருதுகின்றானோ அவருக்கே அதிகமான கஷ்டங்களைக் கொடுத்து சோதனை செய்கிறான். தங்கத்தை பன்முறை நெருப்பில் போட்டுக் காய்ச்சி உருக்கி வடிகட்டிய பிறகு தான் அது சொக்கத் தங்கம் ஆகிறது. அதே விதமான கஷ்ட நஷ்டத்திலும் துன்ப சோதனையிலும் பட்டுத் தேர்ந்து பரிபக்குவமடைந்த மாந்தனே, மாந்தருள் சிரேஷ்டனாகவும் பக்த சிகாமணியாகவும் ஆகின்றான்.

இதே தத்துவார்த்தம்தான், ஆண்டவன், தன் பக்தர்களாகிய நபிமார்களுக்கும் ரஸூல் மார்களுக்கும் சோதனை தந்து பரிபக்குவமடையச் செய்ததில் அடங்கியிருக்கிறது. இது எல்லா காலத்திற்கும் எல்லா தரத்தாருக்கும் பொதுவானது. நபிமார்களைப் போலவே, வலியுல்லாக்களும், காதாக்களும் மகான்களும் பெரியோர்களும் தலைவர்களும், பலதுறைகளிலும் கஷ்ட நஷ்ட சோதனைக்குள்ளாய் தேர்ந்த பிறகே, தங்களுக்குரிய உந்நத அந்தஸ்தை அடைந்து, பேரும் புகழும் பரிபூரணத்துவம் என்னும் கமாலிய்யத்தும் பெற்றுள்ளார்கள்.

'பக்த கோடிகளாகிய மூமின்களுக்கே அதிக சோதனைகள் உண்டாகும்' என்று அல்லாஹு தஆலா, திருக்குர்ஆனில் தெள்ளெனக் கூறியுள்ளான்:—

"அஹ்ஸிபன் னாஸு அன் யகூலூ ஆமன்னா வஹும் லா யப்தனூன்."

அதாவது: "நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம் என்று கூறுகின்றார்களே அந்த ஜனங்கள்-இறைவன் அவர்களை பரிசோதனை

செய்ய மாட்டான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களா?" என்பது கருத்தாகும்.

இக்காலை சில பேர், இவ்வண்ணமே, "நாங்கள் உண்மை முஸ்லிம்கள், பூரண மூமின்கள், இன்ன பீரிடம், இன்ன மஷாயிக் இடம் முரீது பெற்றிருக்கிறோம்; மஃரிபா விஷயங்களை யெல்லாம் தெரிந்து அறிந்து கொண்டு விட்டோம்; தரீக்கத்து ஹகீகத்துகளை யெல்லாம் கரைத்துக் குடித்து விட்டோம்; எங்களுக்குத் தெரியாததே ஒன்றுமில்லை; எல்லா சிர்ரு-ரகசியங்களையும் எங்கள் குரு நாதர் எங்களுக்கு அறிவித்துக் கொடுத்து விட்டார். ஆதலின், நாங்கள் பாமரர்களாகிய 'அவாம்' ஜனங்களுடன் சேரமாட்டோம். அவர்களுடைய பள்ளியில் போய் தொழுதுக் கொள்ள மாட்டோம்- எங்களுடைய தொழுகை வணக்கமே வேறு; எங்கள் வணக்க விதமே வேறு......" என்றெல்லாம் பேசிப் பெருமையடைகிறார்களே அவர்களைப் பற்றி இங்கு பேச்சே யில்லை. ஏனெனின் அவர்கள் இஸ்லாமிய சமூகத்தையும், எல்லாம் வல்ல அல்லாஹ்வையும் ஏமாற்றத் துணிந்தவர்கள். மேலும், எந்த நபியாரும் எந்த ரஸூல்மாரும் தொழுகை வணக்க இபாதத்துக் கடமையை விட்டு நீங்கவில்லையாயின், இவர்களுக்கு மட்டும் எப்படி விடுதலை சாஸனம் கிடைத்து விடும்!

"வஃபுத் ரப்பக்க ஹத்தா யஃதியக்கல் யகீன்"

அதாவது:— "உனக்கு, நிச்சயமாகிய மரணம் வந்துறும் காலம் வரைக்கும், உன்னுடைய இரக்ஷகனுக்கு இபாதத்து (வணக்கம்) புரிந்து கொண்டே இருப்பாயாக" என்று ஆண்டவனே கட்டளை யிட்டுள்ளான். அன்பர்களே! இது நன்கு ஆழ்ந்து யோசிக்க வேண்டிய விஷயமாகும்.

ஆண்டவனுடைய சோதனை முறை பற்பல விதமானதாகும். பணத்தினால் மட்டும் சோதிக்கிறான் என்பதில்லை. ஒருவன் பரம ஏழையாய் இருந்து சாப்பாட்டுக்கும் வழியின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான். இன்னொருவன், 'நம்மிடம் இவ்வளவு பணம் இருக்கிறதே இதை என்ன செய்வது' என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறான். ஒருவன் இருக்க இடமில்லாமலும், இரவில் தூங்க இடம் இல்லாமலும் திண்டாடிக் கொண்டிருக்கிறான். இன்னொருவன்

பெரிய மாளிகை போன்ற பங்களாவில், உற்ற துணைவரும் குழந்தைகளின் பாக்கியமும் இல்லாமல் ஒண்டியாய் இருந்து, திருடர்கட்கும் கொள்ளைக் காரர்கட்கும் பயந்து அவல வாழ்வு வாழ்ந்து வருகிறான்.

இன்னொருவனுக்கு ஆண்டவன், சொத்து செல்வம் கொடுத்திருந்தும், புத்திரபாக்கியம் கிடையாது; இன்னொருவனுக்கு செலவுக்குப் பணம் இல்லாதிருந்தும் குழந்தைகள் ஏராளமாய்ப் பிறந்து வளர்ந்து, போஷிக்க வகையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றான்.

இன்னொருவனுக்கு இறைவன் செல்வத்தோடு பிள்ளைக் குட்டிகளைக் கொடுத்திருந்தும், அந்தப் பிள்ளைகளை ஒவ்வொன்றாய் தொடர்ந்து மரிக்கச் செய்து, சொல்லொணாத் துயரில் ஆழ்த்துகின்றான்.

இன்னும் சிலர்க்கு, பாடுபட்டுப் பயிரிடும் விவசாய விளைச்சலில் பரக்கத்து (அபிவிருத்தி) கொடுக்காமல் சிரமப்படுத்துகின்றான். சிலர்க்கு வியாபாரத்தில் ஆயிரக்கணக்கிலும் இலக்ஷக்ககணக்கிலும் பண நஷ்டத்தைக் கொடுத்து, படாதபாடு படுத்துகிறான்.

இவ்வாறே, சிலருக்கு பணமும் காசும் வீடும் வாசலும் மக்களும் துணைவரும் தோழரும் ஏராளமாக இருந்துங்கூட, நோயும் நொடியும் வியாதியும் வேதனையும் கொடுத்து இறைவன் சிரமத்துக்குள்ளாக்குகிறான்.

இதெல்லாம் எதை விளக்குகின்றன? இதிலிருந்து முஸ்லிம்களாகிய நாம் என்ன படிப்பினை பெறவேண்டும்? இதை ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறார்.

உண்மையான முஸ்லிம்கள், பக்தியுள்ள மூஃமின்கள், இத்தகைய துன்பங்களையும் துயர்களையும் இடுக்கண்களையும் கண்டு மனம் சோர்ந்து விடமாட்டார்கள். கஷ்டம் வந்தக்கால், துக்கப்படுவதற்குப் பதிலாய், உண்மை முஸ்லிம்கள் மனம் தேர்ச்சியடைவார்கள். இதை ஆண்டவனுடைய பரீக்ஷை என்று எண்ணுவார்கள்; 'ஸப்ரு' என்னும் பொறுமையை கைக்கொண்டு, ஆண்டவன் மீது முழுப் பொறுப்பையும் போட்டு, மனச்சாந்தியோடு வாழ்வார்கள். ஆண்டவன் தனக்கு உண்டாக்கியுள்ள சங்கடங்களைப் பற்றி யாரிடமும்

குறை சொல்லிக்கொள்ளமாட்டார்கள். மனத்திற் குள்ளும் தெய்வச் செயல் பற்றிஅதிருப்தி யடைய மாட்டார்கள்.

"பபஷ்ஷிரிஸ்ஸாபிரீன் அல்லதீனஹு...ம்......"

"அப்படிப்பட்ட பொறுமை சாலிகளுக்கு நற்செய்தி கூறு வீராக......" என்று ஆண்டவன் கட்டளை யிடுகின்றான்.

"இன்னல்லாஹ மஅஸ் ஸாபிரீன்"—இப்படிப்பட்ட பொறுமை சாலிகள் விஷயத்தில் ஆண்டவனாகிய அல்லாஹ்வே உற்றதுணையாக இருந்து வருகிறான். முஸ்லிம்கட்கும் முஃமின்கட்கும் ஆண்டவனுடைய துணையை விட வேறென்ன பாக்கியம் வேண்டும்.

"பொறுத்தார் பூமியாள்வார்"என்ற சாதாரண மொழியும் குறிப்பிடத் தக்க தாகும். இது உலகத்தாருக்குரிய பழமொழியாகும். ஆனால், முஸ்லிம்களும் முஃமின்களும் ஸப்ரு செய்து பொறுமை யனுஷ்டிக்குங் கால் துன்யா என்னும் பூமிமட்டும் ஆள்வதோடு ஆகிரத்து என்னும் மறுலோக சாம்ராஜ்யத்தையும் அவர்கள் ஆளும் அருகதை யுடையவர்களாகிறார்கள்.

எனவே, "தவக்கல்து அலல் லாஹ்" (நான் இறைவன் மீது முழுப் பொறுப்பையும் போட்டுள்ளேன்) என்ற வாக்குக் கிணங்கி, முஸ்லிம்கள் ஆண்டவனை மட்டுமே நம்பி வாழவேண்டும். துன்பம் வந்தபோது மனம் சலியாமல், இன்பம் வந்தபோது அகந்தைக் கொள்ளாமல்,ஸப்ரு என்னும் பொறுமையைப் பூஷணமாகக்கொண்டு போதுமென்ற மனத்தோடு ஆண்டன் மீது 'தவக்குல்' வைத்து வாழத் துணிய வேண்டும். வாழ்விலும் தாழ்விலும் ஆண்டவனின் நாட்டமே கதி என்று நம்பி, வாழக் கற்றுக் கொள்வோமாக. இதில் தான் நம்மவர்க்கு இகபர நன்மை இருக்கிறது. வஸ்ஸலாம்!

மஜ்மூஉ மவ்லூது.

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீருன் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யிதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, ஜூத்பிலுத்பிக முனாஜாத்தும் பீஹூப்பி ஸையிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை அணா. 15

ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1—8—0

மஜ்மூஉஸ் ஸலவாத்து.

இப்புத்தகம் அல்லாஹூ தஆலாவின் அஸ்மாவுல் ஹூஸ்னாவைப் பொதிந்த துஆ கன்ஜூல் அர்ஷூம், இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லமவர்கள் பேரில் எப்போதும் கேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும், மற்றும் ஸலவாத்துக்கெல்லாம் தாயானதுமான உம்மு ஸல்வாத்தும், இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கௌதுஸ்ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜைலானி றலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் பேரில் ஓதப்படும் கவ்திய்யா ஸலவாத்தும், இன்னும் ஸெய்யிதினா குத்புல் அக்தாபு வகௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ் மதார் பதீவுத்தீன் றலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் பேரில் ஓதப்படும் மதாரிய்யா ஸலவாத்தும், இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாபு. சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம் போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை அணா. 15

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 15

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹூல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்

அத்தியாயம் 3.

மகான் மஹ்மூது நபி (ஸல்)யின் மரணம் பொதுவாக பரபரப்பையும் பதஷ்ட நிலையையும் தோற்றுவித்தது. முஸ்லிம் உலகின் முதல் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் மக்களைத் திரட்டிச் சொன்னார்கள், "இறைவன் இறவாது இருப்பவன். முஹம்மது (ஸல்) நம்மைப் போன்ற மனிதர். நாம் இறந்து விடுபவர்கள்; அதைப் போல அவர்கள் இறந்து விட்டார்கள்." மகான் மஹ்மூது நபி (ஸல்)யின் மரணம் பற்றிய தீர்க்க தரிசனங்களைக் கொண்ட குர்ஆன் ஆயத்துகளை ஓதிக் காட்டி மக்களை அறிவுறுத்தினார்கள்.

இறை தூதர் (ஸல்) இறந்த பிறகு இலௌகிக விவகாரங்களில் மக்களை வழி நடத்துவதற்காக முறை ஹஸ்ரத் அபூபக்கர், உமர், உதுமான், அலி (ரலி) ஆகியோர் கலீபாக்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இவர்கள் இறைமறை இயம்பிய இதோபதேசங்களின் படி, இறுதி இரசூல் (ஸல்) வகுத்துத்தந்த வழியின் படி நேர்மையாகவும் சீர்மையாகவும் ஆட்சி செலுத்தி வந்தமையால் இவர்களுக்கு "குலபாவுர் ராஷிதீன்" (நேர் வழி பெற்ற கலீபாக்கள்) என்ற கௌரவ விருது வழங்கப்படுகிறது.

இறுதி இரசூல் (ஸல்) காலத்தில் வியாபிக்கத் துவங்கிய இஸ்லாமிய சமூகம் சாம்ராஜ்யம் ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா ஆகிய முப்பெரும் கண்டங்களின் பெரும் பகுதி வரை விரிவடையும் வரை முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பின் வந்த கலீபாக்கள் வாளேந்திப் போர் புரிவதை நிறுத்தவில்லை. ஹஸ்ரத் உமர் இப்னு கத்தாப் காலித் பின் வலீத் முதலிய முக்கிய தளபதிகளின் தலைமையில் இஸ்லாத்துக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்து, இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவடைந்தது. பாரசீகம், பலஸ்தீனம் ஸிரியா, எகிப்து ஆகிய நாடுகள் முஸ்லிம் படையெடுப்புகளுக்கும் பணிந்தன. பன்னிரண்டு வருடங்களில் முப்பத்தாறாயிரம் நகரங்களையுப் பட்டணங்களையும் அரண்மனைகளையும் முஸ்லிம்கள் கைப்பற்றியதோடு, ஆயிரத்து நானூறு மஸ்ஜிதுகளை நிர்மாணித்தனர். மூர்களை முறியடித்து அலெக்ஸாந்திரியா முதல் டாஞ்சியர் வரை ஆப்ரிக்கா முழுவதையும் ஸ்பெயினின் பெரும் பகுதியையும் கைப்பற்றும் வரை முஸ்லிம்களின் முன்னேற்றம் தங்கு தடையின்றிச் சென்றது.

விருத்தாப்பியர்களிடம் வினயம், இளைஞர்களிடம் இதமான பேச்சு, அறிவிலிகளிடம் அன்பான வார்த்தை, வாழ்ந்து தாழ்ந்தவர்களிடம் தாராள மனோபாவம் ஆகிய நற்குண நற்செயல்களின் மூலம் நானிலத்தோரின் நல்லெண்ணத்தையும் நன்மதிப்பையும் நபிகள் நாயகம் (ஸல்) பெற்றுவிட்டார்கள். வாக்கு வன்மை பெற்றிருந்த வள்ளல் நபி (ஸல்) வாளேந்தும் திறமும் உடையவர்களாக விளங்கினார்கள். எழுத்தறிவில்லாதவர்களாக விருந்தும் இயற்கையின் இரகசியங்களை நன்கு தெரிந்து கொண்டார்கள். பாடசாலையில் படிக்கும் பாக்கியம் பெற்றிரா விட்டாலும் படித்த மேதைகளுடன் தர்க்கம் செய்து தவரைத் திருத்து மளவுக்கு புத்தி கூர்மையும் அறிவு விசாலமும் உடையவர்களாக விருந்தார்கள். நற்றோர் காமுறவும் மற்றோர் மரியாதை செலுத்தவும் மகான் மஹ்மூது நபி (ஸல்) மக்களனைவராலும் மதிக்கப் பெற்றார்கள். நண்பர் பெற்றோர் என்ற முறையில் இயல்பான இனிய சுபாவத்தை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். வீட்டு விவகாரங்களிலும் சமூக க்ஷேமநலனிலும் அக்கரை காட்டிய அதே சமயத்தில் அல்லாஹ்வின் தூதர் என்ற பட்டத்தைப் பாதிக்கும் செயல் எதனையும் அவர்கள் செய்யவில்லை. தகைமை மிக்க தலைவர்களுக்கு இயல்பான எளிய சாதாரண வாழ்வை மேற்கொண்ட அவர்கள் அகங்காரம் அல்லது ஆணவம் கொள்ளாமல் அமைதியாகக் காலங் கடத்தி வந்தார்கள். அரேபியாவின் அதிபதியாக அரசு புரிந்த காலத்திலும் செருக்கு கொள்ளாமல் செருப்புகளைத் தைத்து, கர்வம் அடையாமல் கம்பளி உடைகளைத் தைத்து, அகந்தையின்றி அடுப்பு மூட்டினார்கள் என்றால் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் எளிமைக்கு எடுத்துக் காட்டு வேறு வேண்டுமோ? பேரீச்சம் பழமும் தண்ணீரும் தான் அவர்களுடைய வழக்கமான உணவுப் பொருள்; பாலும் தேனும் எப்போதாவது ஒரு முறை உபயோகிக்கப்பட்டது. பிரயாணத்தில் இருந்த போது தம்மிடமிருந்த உணவை தமது வேலைக்காரர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பண்பு பெற்றிருந்தார்கள். தானதர்ம விஷயங்களில் தாராள மனோபாவம் காட்ட வேண்டு மென்ற உபதேசத்தை உண்மையில் உம்மி நபி உதாரணத்தில் காட்டினார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டு இது தான்: கடைசிக் காலத்தில் காத்த முன்னபியின் கஜானா காலியாகக் கிடந்தது.

போர்க்களத்தில் கொலையுண்ட ஜைது (ரலி) அவர்களின் வீட்டில் அண்ணல் அஹ்மது (நபி) அழுது கொண்டிருப்பதைக் கண்டு ஸஹபா ஒருவர் வினவினார்: "நான் என்ன காண்கிறேன்?" மனிதருக்குள்ள பலவீனத்தை விட்டுத் தூய்மையானவர் இறை தூதர் என்ற எண்ணத்துடன் இவ்வினாவை விடுத்த அவருக்கு அண்ணல் நபி (ஸல்) அளித்த பதில் வருமாறு: நேசமும் பாசமும் மிகுத்த

நண்பரொருவரின் மரணம் குறித்து நான் துக்கப்படுவதைக் காண்கி றீர்கள். குரைஷியர்களிடையே தோன்றிய குணசீலர் நபிகள் நாயகம் (ஸல்) குழந்தைகளிடம் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பு ஈடு இணையற்றது. மரியாதைக்கும் மதிப்புக்கும் உரிய மகான் மஹ்மூது நபி (ஸல்) அவர்களின் குணவிசேடங்கள் குறித்து ஆதாரபூர்வமான சரித்திரச் சான்றுகள் உள்ளன. அவற்றை விளக்கத் துவங்கினல் விரியுமென்றஞ்சி விடுக்கின்றனம்.

வீர நபி (ஸல்) யின் நற்குண நல்லொழுக்கங்கள் குறித்து கார் லைனின் கருத்துக்கள் கவனத்துக்குரியவை. அந்த ஆங்கில ஆசிரியர் கூறுகிறார்: "பிரகாசிக்கும் கடுமையான கண்களையுடைய வரும் திறந்த பரந்த உள்ளம் படைத்தவருமான வனந்திரத்தில் வந் துதித்த வள்ளல் நபி (ஸல்) பேராசையை விட்டுத் தூய்மையான எண்ணங்கள் கொண்டிருந்தார். அமைதியை நாடும் சிறந்த உள்ளப் பண்பு படைத்திருந்த அவர்......உண்மையின் உறைவிடமாக இயற்கையால் தெரிந்தெடுக்கப் பெற்றவர். கவைக்குதவாத கோட்பாடு கள், கர்ணப் பரம்பரைக் கதைகள் ஆகியவற்றில் அலைந்து திரிந்து அதிலே மற்றவர்கள் திருப்தி கொள்பவர்களாக இருக்கையில், இம்மனிதர் கோட்பாடுகளைத் திரையாகக் கொள்ள வில்லை; அவர் ஆத்ம சிந்தனையில் ஆழ்ந்தவராக (சிருஷ்டிப்) பொருள்களின் தன் மையை கோட்ட மிட்டவராக விருந்தார். இவ்வையக வாழ்வின் இரகசியம்—அதன் பயங்கரங்களும் அதன் அருமைபெருமைகளும்- அவருக்குத் துலக்கமாகத் தெளிவாயின: இதோ நான் (ஆஜராக) இருக்கிறேன் என்ற எடுத்தியம்ப இயலாத உண்மையை எந்த கர்ண பரம்பரைக் கதையும் மறைக்க முடியாமலிருந்தது. உண்மையை உரைக்குமிடத்து, நாம் கூறுகிறபடி, அத்தகைய உண்மை மனோ பாவத்தில் ஏதோ தெய்வீகத் தன்மை மிளிர்ந்தது. இத்தகைய மனிதரொருவரின் வார்த்தை இயற்கையின் இதயத்திலிருந்து நேரடி யாக வெளிப்பட்ட குரல் ஆகும். அதற்கு (அக்குரலுக்கு) மனி தர்கள் செவி சாய்க்கிறார்கள்; செவிசாய்க்கத்தான் வேண்டும்: வேறு எதற்கும் செவி சாய்க்கலாகாது. ஒப்பிட்டுச் சொல்லும் போது வேறு (குரல்கள்) எல்லாம் (வெறும்) காற்றுதான். ஆரம்பத்தி லிருந்தே அவரது யாத்திரைகளிலும் அலைச்சல்களிலும் ஆயிரம் சிந்தனைகள் குடிகொண்டிருந்தன. நான் யார்? மனிதர்கள் பிரபஞ்சம் என்று பெயரிடுவதும் நான் வாழுவதுமான இந்த ஆழமறிய முடி யாத வஸ்து என்ன? வாழ்க்கை என்பது யாது? மரணம் என்பது எது? நான் எதிலே நம்பிக்கை கொள்ளவேண்டும்? நான் என்ன செய்ய வேண்டும்? (இன்னோரன்ன பிற கேள்விகளுக்கு) ஹீரா குகையின் கற்பாறைகளோ, ஸினய் மலையின் கடின பாறைகளோ மணற் பாங்கான பிரதேசத்தில் தங்கியிருந்த தனிமையும் பதில்

அளிக்க வில்லை. (தாரணியோரின்) தலைக்கு நேராக அமைதியாக ஓடிச் செல்லும் நீல நிறமான நக்ஷத்திரங்களும் பதில் அளிக்க வில்லை. பதில் கிடைக்கவே யில்லை. அம்மனிதரின் ஆன்மாவும் அம்மனிதருக்கு அருளப்பற்ற இறை ஞான வெளிப்பாடும்தான் பதிலளிக்க வேண்டியதாக விருந்தன."

தனி மனிதரான தகைமை சான்ற ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை அவர்களது குடும்பத்தினர் தீர்க்கதரிசி என பாவித்தனர். எளிய அரபியான அண்ணல் அஹ்மது நபி (ஸல்) சிதறிச் சிதைந்து போயிருந்த கயமைத் தன்மையுள்ள காட்டுமிராண்டிகளாக விருந்த அரபியர்களை ஒற்றுமைப் படுத்தி ஒப்புயர்வற்ற, ஒழுக்கத்தில் சிறந்த சமூகமாக மாற்றினர்கள். மாநிலத்தவரிடையே மாணிக்கமாகத் திகழும் வகையில் தீய அரபியர்களைத் திருத்தி இனிய இலட்சணங் களையும் நற்பண்புகளையும் நிலை நிறுத்தினர்கள். உறுதியான அடிப் படையில் அமைக்கப்பெற்ற இஸ்லாமிய சமூதாயம் முப்பது வருட காலத்துக்குள் கான்ஸ்டாண்டிநோபிள் முடி வேந்தரை முறியடித்து, பாரசீக தொண்டைமான்களைத் தோற்கடித்து, ஸிரியாவைக்கைப் பற்றி எகிப்தையும் வசமாக்கிக் கொண்டது. அட்லாண்டிக் முதல் காஸ்பியன் கடல்வரை இஸ்லாமிய ஜெயக்கொடி ஜெகஜ்ஜோதியாகச் சென்றது. விரிந்த, பரந்த இந்த நிலப் பிரதேசத்தில் ஆயிரத்து இருநூறு ஆண்டுக்காலம்வரை அரசியல் ஆதிக்கம் செலுத்தியது இஸ்லாம்; இதற்கு இஸ்பெயின் விதிவிலக்காக விருந்தது. இஸ் லாத்தின் அரசியல் ஆதிக்கம் எவ்வாறிருந்த போதிலும் ஆத்மீகத் துறையில் அதன் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டு வந்துள்ளது.

இன்றுங்கூட இறைமதமாம் இஸ்லாம் வட ஆசியாவிலும் மத்திய ஆப்ரிக்காவிலும் காஸ்பிக் பிரதேசத்திலும் பரவிக் கொண்டே வருகிறது.

இறை தூதர் (ஸல்) அவர்களின் இளகிய மனம், இரும்பு உள்ளம் பற்றி இன்னும் இயம்பத் துவங்கினல் விரியுமென் றஞ்சி விடுத்தனம். கருணைக் கடல் காத்தமுன்னபி (ஸல்) ஸ்தா பித்த மதம் கலை, கலாசாரம், விஞ்ஞானம் ஆகிய பல சாஸ்திரங் களின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ளது என்பதை எவரேனும் எதிர்க்க வல்லரோ? அவனியில் அஞ்ஞானத்தை அகற்றி, மெஞ் ஞானத்தை நிலை நிறுத்தியதோடு இஸ்லாம் சாதி, சமய சச்சரவுக ளுக்குச் சமாதி கட்டி சகிப்புத் தன்மையும் சமாதானமும் தழைத் தோங்கச் செய்ததென்பதை மற்ற மதத்தினரும் மறுக்க வல்லரோ?

(தொடரும்.)

இஸ்லாமிய சரித்திரச் சாரம்.

ஹிஜ்ரீ 1-லிருந்து 50-வரை

(டி. எப். ஆர். ம்ஆலி ஸாஹிப்-பாகவி)

ஹிஜ்ரி-30:

அன்ஸாரியாகிய அப்துல்லாஹ் பின் கஅப் (ரலி) அவர்கள், பத்ரு யுத்தத்திலும் ஒரு போர் வீரராய் இருந்து, இஸ்லாமுக்கு சேவை செய்தவர்கள். இவர்கள் இவ்வாண்டே இறந்து போனார்கள்.

கலீபா ஹஜ்ரத் உத்மான் (ரலி) அவர்கள், ஜும்ஆ தொழுகைக்கு முன், இமாம் மிம்பர் மீது ஏறுங்கால் இரண்டாம் விடுத்தம் பாங்கு (அதான்) சொல்லப்படுகிறதே, இந்தச் சம்பிரதாயத்தை, இவ்வாண்டு துவக்கிவைத்தார்கள்.

ஆதியில் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய போதனைக்கு இணங்கி இஸ்லாத்தில் சேர்ந்த முதன்மை அணி முஸ்லிம்களில் 6-வது நபராகிய ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், இவ்வாண்டு இறந்துபோய்விட்டார்; இப்பெரியார், நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுடைய காதிமாகவும் இருந்து ஊழியம் செய்துள்ளார்.

ஹிஜ்ரி-31:

பாரஸீக தேசத்து அதிபதியாக இருந்து அங்கு இஸ்லாமிய ஆட்சி ஏற்பட்ட பின்பும் பணியாமல் புரட்சி செய்து ஓடிப்போய், பிறகு பிடிப்பட்டு மீண்டும் பத்து முறை ஓடி ஒளிந்துத் திரிந்த 'யஜ்துகிர்து' என்பவன், இறுதியாய் இவ்வாண்டு முஸ்லிம் வீரர்களுடைய கையினாலேயே கொல்லப்பட்டான்.

ஹிஜ்ரி-32:

இவ்வாண்டு ரஜப் மாதம் 12ந்தேதி, ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், தமது 88ம் வயதில் இறந்து போய், மதீனா முனவ்வராவிலுள்ள ஜன்னத்துல் பகீஃ என்னும் உத்தியான வனத்தில் கல்லடக்கம் செய்யப் பட்டார்கள்.

அஷ்ரயே முபஷ்ஷரா வென்னும் பத்து புருஷோத்தமர்களில் ஒருவரான ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவுப் (ரலி) அவர்கள், தமது 72-ம் வயதில் இறந்து போனார்கள். இவர்களின் அடக்கஸ்தலமும் ஜன்னத்துல் பகீயே யாகும்.

முதன்முதல் இஸ்லாமை ஏற்று முஸ்லிமானவர்களில் ஐந்தாவது நபரும், பிரபல ஸஹாபியுமாகிய ஹஜ்ரத் அபூ தர்ரு கப்பாரீ (ரலி) அவர்கள், 'ருப்தா' என்ற ஸ்தலத்தில் இறந்து போனார்கள்.

ஹிஜ்ரி-33:

ஹஜ்ரத் ஸல்மான் பார்ஸீ (ரலி) அவர்கள், மதாயின் என்ற ஊரில் இவ்வாண்டு இறந்து போனார்கள்.

அல் மிக்தாத் பின் அல்அஸ்வத் (ரலி) அவர்களும் தம் 70-வது வயதில் இறந்துபோய் பகியில் நல்லடக்கமானார்கள்.

ஹிஜ்ரி-34:

ஹஜ்ரத் அமீர் முஆவியாவின் தகப்பனாராகிய ஸஹாபி ஹஜ்ரத் அபூஸுப்யான் (ரலி) அவர்கள், இவ்வாண்டு இறந்து போனார்கள். இவர்களும் பகீஃயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஹிஜ்ரி-35:

இஸ்லாத்தின் மூன்றாவது கலீபாவாகிய தனவந்தர் ஹஜ்ரத் உத்மான் பின் அப்பான் (ரலி) அவர்கள், இவ்வாண்டு துல்ஹஜ்ஜு மாதம் 18-ந்தேதி புனித வெள்ளிக் கிழமையன்று, 11 வருஷம் 11 மாதம் 28 நாட்கள் கிலாபத் ஆட்சியை செவ்விதமே நடத்தி, இஸ்லாத்திற்குப் பெருமிக சேவை செய்து கொண்டிருந்து, உட்பிரிவின் காரணமாய் விரோதிகளால் சூழ்ந்து கொள்ளப்பட்டிருந்து, தொழுது விட்டு திருக் குர்ஆன் ஓதிக்கொண்டிருக்கும் போது ஒருவனால் வெட்டிக் கொல்லப்பட்டு ஷஹீதானார்கள். (அந்தோ)!

அதன் பின் (இவ்வாண்டு) ஹஜ்ரத் அலி பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், இஸ்லாத்தின் நான்காவது கலீபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஹிஜ்ரி-36:

கலீபா ஹஜரத் அலீ (ரலி) அவர்கள், 'தாருல் கிலாபத்' என்னும் தமது இஸ்லாமிய கிலாபத் காரியாலயத்தை, திருமதீனாநகரை விட்டு, இவ்வாண்டு கூபாவுக்கு மாற்றி, அங்கு கார்யாலயம் ஏற்படுத்தினார்கள்.

பத்து புருஷோத்தம-அஷ்ரயே முபஷ்ஷராக்களில் ஒருவரான ஜுபைர் பின் அல்அவாப் (ரலி) அவர்கள், இவ்வாண்டு இறந்து போனார்கள். அப்பெரியாரின் தாயாரும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அத்தை (பூப்பி)யும் தான், ஹஜ்ரத் ஸபிய்யா பின்த் அப்துல் முத்தலிப் என்பார்.

ஹிஜ்ரி-37:

இவ்வாண்டே, இஸ்லாத்திற்குக் களங்கமாய், அமீர் முஆவியாவுக்கும்-ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்குமிடையில் ஸுப்பைன் என்னுமிடத்தில் போர் நிகழ்வுற்றது. இப்போரில், ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களது தரப்பில் 23 ஆயிரம் முஸ்லிம் வீரர்களும், அமீர்

முஆவியா அவர்களது தரப்பில் 45 முஸ்லிம் வீரர்களும் ஈடுபட்டு இரத்தம் சிந்தி பலர்மாண்டு மடிந்தார்கள். (அந்தோ)

இவ்வாண்டு ஷஃபான் மாதம் 9-ந்தேதி இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கு (ஹஜ்ரத் இமாம்) ஜைனுல் ஆபிதீன் (என்னும் குழந்தை) பிறந்தது.

ஹிஜ்ரி-38:

இவ்வாண்டுதான் 'கவாரிஜிய்யார்' என்ற பிரிவினர்(முஸ்லிம்களிலிருந்து) தோன்றினர்கள்; இவர்களை, ஹஜ்ரத் அலி (ரலி)அவர்கள் எதிர்த்து தார்மீக முறையில் போராடி, அவர்களின் விஷமத்தனங்களை அடக்கி ஜெயமும் பெற்றூர்கள்.

பனீ உமய்யாக்களில் விஷமக் கோஷ்டினர் கிளம்பி, எகிப்து நாட்டில் இஸ்லாமிய சேவை செய்து கொண்டிருந்தவரும் முதல் கலீபாவான ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக்(ரலி)அவர்களின் குமாரருமான முஹம்மத் என்பவரை, இவ்வாண்டில் அநியாயமாய் கொன்று போட்டார்கள்.

ஹிஜ்ரீ-39:

அமீர் முஆவியா (ரலி), எகிப்து (என்னும் மிஸ்ர்) ராஜ்யத்தை பலவந்தமாய் ஆக்ரமித்துப் பிடித்துக்கொண்டு, அங்கு உமர் பின் ஆஸ் என்பவரை தம்முடைய சார்பாகப் பிரதிநிதியாக (கவர்னராக) நியமித்துக் கொண்டார்.

இச்சம்பவத்திலிருந்து இஸ்லாமிய கிலாபத் (குடியாட்சி) முறையில் பிரிவினையும் எதேச்சாதிகாரமும் தோன்றித் தாண்டவமாட லாயின.

ஹிஜ்ரீ-40:

நான்காம் கலீபா ஹஜ்ரத் அலீ (கர்ரமல்லாஹு வஜ்ஹஹு) அவர்கள், இவ்வாண்டு ரமலான் மாதம் 21-ந் தேதி வெள்ளியன்று, ஓர் ஏவலாளான இப்னு முல்ஜிம் என்பவனுல் வெட்டிக் காயப்படுத்தப்பட்டு, ரமலான் 21-ந் தேதி அதே வேதனையினுல் (ஷஹீதாகி) இறந்து போனூர்கள்.

ஹிஜ்ரீ-41:

ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஷஹீதாகி (மரித்து) மறைந்த பின், அவர்களுடைய அருமந்தப் புதல்வரான ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்கள், கிலாபத் ஆசனத்தின் மீது அமர்த்தப்பட்டார்கள். ஆனுல், ஆறு மாதங்கள் மட்டும் கிலாபத் ஆட்சி நடத்திய பின், அமீர் முஆவியாவுக்கு சாதகமாக (ஏதோ தர்மசங்கடத்தின் காரணமாக) தம் கிலாபத் பதவியிலிருந்து ஒதுங்கி விட்டார்கள். அத்துடன் அமீர் முஆவுக்கு 'பைஅத்து' என்னும்

வாக்கு ஒப்பந்தமும் செய்து கொடுத்து விட்டார்கள். இதிலிருந்தே பனீ உமய்யாக்களுடைய கிலாபத் ஆட்சிமுறை ஸ்தாபிதமாயிற்று.

ஹிஜ்ரீ-42:

அதன்பின் அமீர் முஆவியா (ரலி), மர்வான் பின் அல்ஹிகம் என்பவரை, திரு மதீனா நகருக்கு 'அதிகாரி'யாக நேரடியாக நியமனம் செய்து, ஆட்சி செலுத்துவதானார்.

இவ்வாண்டு குறைஷ் குலத்தில் ஓர் அறிவாளியும் இலக்கண முறைப்படி பேசும் தன்மை யுடையவருமான ஸப்வான் பின் உமய்யா, மக்கா நகரில் இறந்து விட்டார்.

ஹிஜ்ரீ-43:

இவ்வாண்டு அமீர் முஆவியா (ரலி) தமது சகோதரரான ஜியாத் பின் அபீ ஸுஃப்யானை, பஸ்ரா நகருக்கு கவர்னராக (அதிகாரியாக) நியமனம் செய்து ஆட்சி செலுத்தினார்.

முதலில் எகிப்து (மிஸ்ர்) நாட்டை, இஸ்லாத்தின் பெயரால் ஜெயித்தவரான ஹஜ்ரத் அம்ருபின் அல்ஆஸ் (ரலி) அவர்கள், தமது 90-ம் வயதில் இறந்து போய்விட்டார்கள்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களால் 'இவர் சுவர்க்கம் புகுவார்' என்று பாராட்டப்பட்ட அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்கள் இவ்வாண்டே இறந்தார்கள்.

ஹிஜ்ரீ-44:

அமீர் முஆவியா (ரலி) தம்முடைய ஜீவிய காலத்திலேயே தமது மகனாகிய யஜீதை, தம் கலீபா ஸ்தானத்துக்குரிய 'வாரிஸ்' என்று அறிவித்து இவ்வாண்டு நியமித்து வைத்துவிட்டார்.

இவ்வாண்டு ரபீவுல் ஆகிர் மாதத்தில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பத்தினிகளி லொருவரான உம்முல் மூமினீன் ஹஜ்ரத் ஹபீபா (ரலி), திருமதீனா நகரத்தில் தமது 53-ம் வயதில் இறந்து போனார்கள்.

ஹிஜ்ரீ-45:

இவ்வாண்டு, அரபு முஸ்லிம் வீரர்கள், ஹிந்துஸ்தான் பக்கம் படையெடுத்து வந்து, காந்தஹார் (கந்தாரம்) என்ற பிரதேசத்தை வெற்றியுடன் பிடித்துப் பிறகு சிந்து மாகாணப் பகுதியிலும் முன்னேறிச் சென்றார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீ வந்து திருவுளமாகும் போதெல்லாம், கூடவே இருந்து எழுத்து வேலை செய்து வந்த குர்ஆன் காத்திபும், ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் கிலாபத் ஆட்சி காலத்தில் பரிசுத்த குர்ஆன் பிரதிகளை எழுதிக் கொடுத்தவரும், பிறகு ஹஜ்ரத் உத்மான் (ரலி) அவர்களு

டைய கிலாபத்து ஆட்சி காலத்தில் முன் பிரதிக்கிணங்க குர்ஆன் ஷரீபின் பிரதிகளை நக்கல் செய்து எழுதித் தந்தவருமான ஜைத்பின் ஸாபித் (ரலி) அவர்கள், இவ்வாண்டு மதீனா நகரில் தமது 56-வது வயதில் இறந்துபோனார்கள்.

உம்முல் மூமினீன் ஹஜ்ரத் ஹப்ஸா நாயகி (ரலி) அவர்கள் திருமதீனாவில் தமது 60-ம் வயதில் இறந்து போனார்கள்.

ஹிஜிரி-46:

குராஸான் தேசத்தில் இஸ்லாமிய கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த ஸயீத் பின் உத்மான் (ரலி), தமது ஊக்கத்தினால் ஸமர்கந்து—தருக்கிஸ்தான் முதலிய இன்னும் அநேக ஊர்களை வெற்றி கொண்டு பிடித்து, இஸ்லாமிய ராஜ்யத்தை மேன்மேலும் விருத்தி செய்தார்கள்.

ஹிஜிரி-47:

பின்னாளில் பனீ உமய்யாக்களின் 6-வது கலீபாவாக விளங்கிய வலீத் பின் அப்துல் மலிக், இவ்வாண்டு இவ்வுலகில் பிறந்தார்.

பின்னாளில் பிரபல மார்க்க நிபுணராகவும், ஒழுக்க சீலராகவும் பக்த சிகாமணியாகவும் விளங்கிய 'தாபிஈன்' ஹஜ்ரத் முஹம்மத் பின் யஹ்யா (ரஹ்) அவர்களும் இவ்வாண்டே பிறந்தார்கள்.

ஹிஜிரி-48:

அமீர் முஆவியா (ரலி) தம் கிலாபத் ஆட்சியை விரிவடையச் செய்ததோடு ரோடஸ் தீவு, அர்தாவு தீவு முதலியவையும் வெற்றியுடன் பிடித்து, அங்கு முஸ்லிம்களை ஏராளமாய் புதிதாய் குடியேறச் செய்து வைத்தார்; அத்துடன் ஸிஸிலி, கிரீட் தீவுகள் மீதும் இவ்வாண்டு தாக்குதல்கள் புரிந்தார்; ஆனால் இங்கு வெற்றி கிட்டவில்லை.

ஹிஜிரி-49:

பனீ உமய்யாக்களின் அயோக்கிய விஷமக்காரக் கோஷ்டியினர், ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களுக்கு ரகசியமாய் விஷத்தைப் புகட்டி கொன்று (ஷஹீதாக்கி) விட்டனர்.

ஹிஜ்ரி-50:

இவ்வாண்டு திருநபியின் நாயகிகளான ஹஜ்ரத் ஹப்ஸா (ரலி) தம் 62-ம் வயதிலும், ஹஜ்ரத் ஸபிய்யா (ரலி) 70-ம் வயதிலும் (மக்காவுக்கருகில் ஸர்ப் என்று ஊரில்) இறந்து விட்டனர்.

இவ்வாண்டு தோஹிஸ்தான் படையெடுப்பில் முஸ்லிம்கட்கு வெற்றி கிடைத்தது. முகய்ரா பின் ஷுஃபாவும், ஹிஸான் பின் ஸாபிதும் இவ்வாண்டே இறந்து போனார்கள்.

இரத்தின விலாசம்
நஸீஹத்துலாசம்

அல்லாஹ் றஸூலைக் கொண்டு ஈமான் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் படித்தறிந்து அமல் செய்ய வேண்டிய அருமையான நூல் இது. பிரபல இஸ்லாமிய அரபு கிரந்தங்களாகிய கஜானத்துல் அஸ்ரார், ஷிர்ஹத்துல் இஸ்லாம், ரத்துல் முக்தார், துர்ரத்துன் காஸிஹின் முதலிய கிதாபுகளிலிருந்து திரட்டி யெடுத்தெழுதப்பட்ட அருமையான நஸீஹத்துகளும், மஸ்அலாக்களும் ஹதீதுகளும் ஹிக்காயத்துகளும் நிறைந்த நூல் இது. ஒவ்வொருத்தருடைய கையிலும் இருந்து தீர வேண்டிய புஸ்தகம். தமிழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத நூல். இதன் அருமை நேரில் பார்த்தால் தெரியவரும். சுத்தத் தமிழ் ரூ. 1-8-0

மஜ்மூஉ முஃஜிஸாத்தூர் றஸூல்

இந்த புஸ்தகமாகிறது நமது நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அற்புதங்களாகிய 1011 முஃஜிஸாக்களை ஒழுங்கு திரட்டி "மஜ்மூஉ முஃஜிஸாத்தூர் றஸூல்" என்னும் நாமமிட்டு 3 வால்யமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதர நபிமார்களுடைய அற்புதங்களை விட நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய முஃஜிஸாத் தென்னும் அற்புதமாகிறது மிகவும் அருமையானது. இதில் 1-வது வால்யம் 395 முஃஜிஸாத்துகள் அடங்கியன.

கிளேஸ் கலிகோ பைண்டு விலை ரூ. 2—14—0

[ஹதீதுகள்]

நபி நாயகத்தின் திருவாக்கியம்

(மிஷ்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு)

(முதற் பாகம்)

இதில் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள் அடங்கி இருக்கின்றன. முதற்பாகம் 930 ஹதீதுகள் அமைந்தது. டிம்மி 1-8 ஸைஸில் 288 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 2—4—0

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட் திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(20-வது பகுதி)

திருக் குர்ஆன் : : : :

: : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

லூத் நபிக் கூட்டத்தாரின் துராக்கிருதச் செயல்

(இறைவனுகிய) எமது மலக்குகள், அந்த (லூத் நபியின்) கூட்டத்தாரிடம் (அழகிய தோற்றத்தில்) வந்தபோது, அவர்களின் வருகை, லூத் நபிக்கு மிகவும் அதிருப்தியாகப் பட்டது. (ஏனெனின், மலக்குகள் சோதனைக்காகவே, அழகான பையன்களுடைய தோற்றத்தில் விஜயம் செய்திருந்தார்கள்.) எனவே, லூத் நபி, இவர்களின் வருகையினல் (என்ன விபரீதம் நேரிடுமோ என்று பயந்து) மனம் சோர்ந்து போய், 'அந்தோ! இன்று எனக்கு மிகவும் கடினமான நாளாய்த் தெரிகிறதே' என்று பிரலாபித்தார்.

லூத் நபியின் (அதமக்) கூட்டத்தார், லூத்துடைய வீட்டுக்கு (விருந்தாளிகளாய் சில அழகிய பையன்கள் வந்திருக்கும் செய்தியை கேள்விப்பட்டு, பலாத்காரம் செய்யும் துராக்கிருத எண்ணத்தோடு) ஓடோடியும் வந்து சேர்ந்தார்கள். இதற்கு முன்னருங்கூட, இந்தக் கூட்டத்தினர் இத்தகைய பல அக்கிரமங்களைச் செய்திருக்கிறுர்கள். ஆதலின் லூத் நபி, (இந்த துஷ்டர்கள் வந்து சேர்ந்ததைக் கண்டு) பயந்து போய், "ஏ என் சமூகத்து சகோதரர்களே! நீங்கள் இன்பத்தை வேண்டி இங்கு வந்திருப்பதாயின், இதோ என்னுடைய இளம் புத்திரிகள் (வீட்டில்) இருக்கிறுர்கள். (ஒழுங்கு முறைப்படி நீங்கள் அவர்களைக் கலியாணம் செய்து கொள்ளுங்கள்.) இவர்கள், (உறவினல்) உங்களுக்கு பரிசுத்தமானவர்களா யிருப்பார்கள். (ஆதலின் தயவு செய்து, எனது வீட்டுக்கு விருந்தாளிகளாக வந்திருக்கும் பையன்கள்பால் கெட்ட பார்வையை செலுத்தாதீர்கள்.) இது விஷயத்தில், அல்லாஹ்வுக்குப் பயந்து ஒழுகிக் கொள்ளுங்கள். என்னுடைய விருந்தாளிகளை (பலவந்தம் புரிந்து) அவமானப்படுத்தாதீர்கள். (நீங்கள் இப்படி தீய செயலுக்கு முனைகிறீர்களே) உங்களில் யாரும் (உங்கள் தீச் செயலை விட்டும் விலக்கும் ஆற்றலுள்ள) உத்தமர் இல்லையா?" என்று லூத் நபி, விநயமாக வேண்டிக் கொண்டார்.

அதைக் கேட்டு அந்த அதமக் கூட்டத்தினர், ("ஏ லூத்தே!) உமது இளங் குமாரத்திகளிடம் எங்களுக்கு எவ்விதத் தேவையு

மில்லை. நாங்கள் இப்போது என்ன புரிய வேண்டுமென்று இங்கு நாடிவந்தோமோ அதை நீர் நன்கு அறிந்தேதான் இருக்கிறீர்! (ஆகவின்,) எங்களுக்கு வழி விடுங்கள்" என்று (ஈனத்தனமாக) பதில் கூறினார்கள்.

(இதைக் கேட்டு) லூத் நபி, (மனம் வருந்தி) "அந்தோ! உங்களை (புஜபலத்தால்) எதிர்த்துத் தடுத்து நிறுத்த எனக்கு சக்தி இல்லையே! எனக்குத் துணையாக, உங்களை எதிர்த்துத் தடுத்துவிட வெளி சக்தியும் கிடைக்க வில்லையே" என்று ஏங்கிப் பிரலாபித்தார்.

அப்போது, (பையன்களின் கோலத்தில் வந்திருந்த) மலக்குகள், (நபியின் அருகில் வந்து) "ஏ லூத்தே! நீவிர் (ஏதொன்றுக்கும்) அஞ்ச வேண்டாம். (நாங்கள் சாதாரண மனிதர்களல்ல); ஆண்டவன் புறத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட மலக்குகளாக இருக்கின்றோம். இந்த துர்த்தக் கூட்டத்தார், (எங்கள் அருகிலென்ன?) உங்கள் அருகில்கூட நெருங்கிவர சக்திபெற மாட்டார்கள். அவர்கள் விஷயம் இருக்கட்டும்; நீவிர், (இப்போதே) இரவோடு இரவாக, உமது மனைவி மக்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு, (இவ்வூரை விட்டு) வெளியேறிப் போய் விடுவீர்களாக. (போகும் போது) உங்களில் எவரும் எங்களைத் திருப்பிப் பார்க்கவும் கூடாது; ஆனல், (விதிவசப்படி) உமது (அதம) மனைவி மட்டும் திரும்பிப் பார்ப்பாள்; (பின் தங்குவாள்; அவளைப் பற்றி நீவிர் கவலைப்பட வேண்டாம்.) இறுதியில் உமது (அதமக்) கூட்டத்தார் மீது இறங்கப் போகும் (பயங்கர அதாபு) தண்டனை, அவள்மீதும் இறங்கத்தான் போகிறது. அந்த தண்டனைக் குரிய (குறித்த) நேரம் ஸுப்ஹு (காலை) நேரமாகும்; (அதிகாலை) ஸுப்ஹு நேரம் இதோ சமீபிக்க வில்லையா, என்ன?" என்று (ஆறுதல் மொழி கூறி) நபியைத் தேற்றினர்கள்.

பிறகு (இறைவனுகிய) எமது கட்டளை பிறந்து விட்டது. அப்போது யாம், (வந்த மலக்குகளின் மூலம்) அந்த துர்த்த கூட்டத்தாரின் ஊரையே தலை கீழாகப் புரட்டிப்போட்டு அழித்து விட்டோம். அத்துடன், அவர்கள்மீது கற்களின் குவியலை மழை போல் வீசிப் பொழிய வைத்தோம். இதனுலும் அவர்கள் அழிந்தனர். (ஏ, முஹம்மத்) நபியே! இதிலெல்லாம் (பிற்கால உம்மத்து) ஜனங்களுக்கு, உமது இரக்ஷகனின் விசேஷமான அத்தாக்ஷிகள் இருக்கின்றன. அழிந்த அந்த ஊர் (உங்கள் மக்காவிலுள்ள) காபிர்களுடைய ஊரை விட்டும் வெகு தூரத்திலில்லை. (ஸூரா: ஹூத்; ருகூ: 7)

யூசுப் நபி கண்ட அரிய கனவின் பலன்!

(அதிபால்யராக இருந்தபோது) யூசுப் (நபி), தனது தந்தை (யாகூப் நபி) அவர்களை யணுகி, "தந்தையே, நான் ஒரு கனவு கண்டேன்; அதில், பதினெரு நட்சத்திரங்களும் சூரியனும் சந்திரனும், எனக்கு(ப் பணிந்து) ஸஜ்தா செய்வதை (காட்சியாகக்) கண்டேன்" என்று கூறினர். இதைக் கேட்ட தந்தை (யாகூப் நபி, மைந்தன் யூசுபை நோக்கிக்) கூறியதாவது:—"என் (அருமை) மகனே! உன் கனவின் விபரத்தை, உன்னுடைய சகோதரர் (பதினெரு பேர்)களுக்குச் சொல்லிவிட வேண்டாம். அப்படிச் சொன்னுல் (கனவின் விபரத்தைக் கேட்டு) அவர்கள் உனக்கு(ப் பாதகமாக) ஏதேனும் மோச வலையை விரித்து வைப்பார்கள்; (வஞ்சிப்பார்கள்.)-ஷைத்தானுனவன் மனிதர்களுக்குப் பகிரங்கமான விரோதியா யிருக்கின்ருன். மகனே! (நீ கனவில் கண்ட விபரப்படியே வாஸ்தவத்திலும்) அப்படியே நிகழ்ப் பெறத்தான் போகிறது. உனக்கு உன்னுடைய இரக்ஷகன், சிரேஷ்டமான பதவியைத் தரத் தான் செய்வான். மேலும் உனக்கு கனவுகளின் பலாபலன் கூறும் (சொர்ப்பன சாஸ்திர ஞான) ஆற்றலையும் கற்றுத் தருவான். மேலும் இறைவன், தன்னுடைய அருட் பாக்கியத்தை, உன் மீதும் யாகூபுடைய (என்னுடைய) மக்கள் மீதும் (பரிபூரணமாய்) சொரியத்தான் போகின்ருன். உதாரணமாய்: இதற்கு முன்னரும் உன்னுடைய இரக்ஷகன், உன்னுடைய தந்தை-பாட்டன்களாகிய நபி இப்ராஹீம், நபி இஸ்ஹாக் முதலியோர் மீது தன் அருளை பூர்த்தி செய்திருக்கிருன். நிச்சயமாக உன்னுடைய இரக்ஷகன் சகலவற்றையும் (முன்னதாகவே) அறியக் கூடியவனுகவும், விவேகமுடையவனுகவும் இருக்கின்ருன்" என்பதாகும். (ஸூரா: யூஸுப்; ருகூ: 1.)

யூசுப் நபியை, தீய சகோதரர்கள் கிணற்றில் தள்ளி விட்டனர்

(தந்தை யாகூப் அலைஹிஸ்ஸலாம், சிறிய மகன் யூசுப் நபியை அதிகப் பிரியமாக நேசித்ததால், மூத்த சகோதரர்களாகிய பதினெரு பேர்களும் பொருமை கொண்டிருந்தார்கள்)

அவர்கள், இவரை (வனத்துக்கு) அழைத்துக் கொண்டு போன போது, தங்களுக்குள் சதியாலோசனை செய்து, யூசுபை கிணற்றில் தூக்கிப் போட்டு விடுவதென்று முடிவு செய்தார்கள். பிறகு அங்ஙனமே செய்தும் விட்டனர்.

இறைவனுகிய யாம் அப்போது, (கிணற்றில் தள்ளப்பட்டு ஆதரவற்றுக் கிடந்த) யூசுபுக்கு வஹி (நற்செய்தி) அறிவித்தோம்.

(அதாவது:-"யூசுபே, மனம் சோர வேண்டாம், உமக்கு ஒரு நல்ல நாள் வரும்;) அப்போது, நீர், அவர்களுடைய துர்கிருத்தியங் களுக்காக அவர்களுக்கு எச்சரிக்கை (ஆக்ஞை) செய்யக் கூடிய வரா யிருப்பீர்: அப்போது அவர்கள், உம்மை இன்னா ரென்று அறிந்து கொள்ளும் ஸ்திதியிலும் இருக்க மாட்டார்கள்"—என்ப தாகும்.

(யூசுப் நபியைக் கிணற்றில் தள்ளியானதும், மாலை நேரம் வந்து) இருட்டு நேரமானதும், அவர்கள் (பதினொருவரும்) தங்கள் தகப்ப னிடம் அழுது கொண்டே வந்து சேர்ந்தனர். மேலும் (புலம்பிப் பொய்யாகக்) கூறியதாவது:—எங்கள் தகப்பனாரே! நாங்கள் (வனத் தில்) பந்தயம் போட்டு யார் முதலில் ஓடுகிறார் என்று (விளையாட் டாக) ஓடினோம். அப்போது நாங்கள் எங்கள் சாமான்களின் அருகில் (தம்பி) யூசுபை உட்கார வைத்து விட்டுப் போனோம். அச் சமயம் அவனை ஓநாய் (வந்து கடித்துத்) தின்று விட்டது. (தந்தையே!) தாங்கள், எங்கள் பேச்சை நம்ப மாட்டேன் என் கிறீர்களே! நாங்கள் உண்மையாளர்களாகவே இருக்கின்றோ மில்லையா! (என்று கூறி, தங்கள் கூற்றை ருஜூப்பிக்க ஆதாரமாய்) யூசுபுடைய கிழிந்த சட்டைத் துணி மீது, பொய்யான-போலி இரத்தத்தைத் தடவி கொண்டுவந்து காட்டினார்கள். அதைக் கண்ட பிறகும் கூட, தந்தை யாகூப் நபி கூறியதாவது:—"யூசுபை ஓநாய் கொன்று தின்றிருக்க மாட்டாது' என்பதில் ஐயமில்லை; நீங்கள் பொய்ச்சாக்கு சொல்கிறீர்கள். சரி போகட்டும். நான் பொறுமையை அனுஷ்டித்துக் கொள்கிறேன்; நீங்கள் சொல்கிற தற்குப் பாதகமாக, அல்லாஹ் (தஆலா) எனக்கு உதவி செய்யப் பிரார்த்திக்கின்றேன்" என்பதாகும். (ஸூரா: யூசுப்; ருகூ: 2)

யூசுப் நபியை அடிமையாக்கி விலைக்கு விற்று விட்டனர்

அப்போது (கிணற்றருகில்) ஒரு வர்த்தகக் கூட்டத்தார் (எதிர் பாராதபடி) வந்து சேர்ந்தனர். அவர்கள் (கிணற்றி லிருந்து) தண்ணீர் இறைத்து எடுத்து வருவதற்காக, தண்ணீர்காரனை அனுப்பி வைத்தார்கள். அவன் வந்து (கயிறு கட்டி கிணற்றுக் குள்) பாத்திரத்தைப் போட்டான். (யூஸுப் நபி, கிணற்றுள் அந்தப் பாத்திரத்தைப் பிடித்து அதில் அமர்ந்து வெளியே வந்து சேர்ந்தார்.)

அதைக் கண்டு (பூரிப்படைந்த) தண்ணீர்காரன், "ஆஹா! சந்தோஷச் செய்தி; இதோ ஒரு பையன் (எனக்கு கிடைத்து விட் டான்)" என்று சொன்னான். (காபிலா) கூட்டத்தினரும் (பார்த்து

சந்தோஷப்பட்டு) யூசுபை (பிறர் பாராதபடி) தங்கள் வர்த்தக சாமான்களில் மறைத்துக் கொண்டு போனார்கள். யூசுபைப் பற்றி இந்த ஜனங்கள் செய்த (சாதக-பாதகமான) ஆலோசனை (ஏற்பாடு) களை யெல்லாம், அல்லாஹ் (தஆலா) நன்கு அறிந்த வண்ணமே இருந்தான்.

எனவே, அந்த (வர்த்தக)க் கூட்டத்தினர் (எகிப்து நகரத்துக்குக் கொண்டு போய் நபி) யூஸுபை, மிகவும் சாதாரண கிரயத்துக்கே (அதாவது சில 'திர்ஹம்' நாணயங்களுக்குப் பகரமாய்) வேண்டா வெறுப்போடு, விற்று விட்டனர். (இளைஞர்) யூசுபை விலைக்கு வாங்கிய எகிப்து தேச அஜீஸ் (என்னும் அதிபதி), அவரை (தன்னுடைய மனைவியாகிய) ஜுலேக்காவிடம், பணிவிடைக்காக ஒப்படைத்து, "இவ்வாலிபனை நல்லபடியாக (பாதுகாத்து) வைத்துக் கொள். இவன் பின்னர் நமக்கு உபயோகமாக இருப்பான்; அல்லது நாம் இவனை பிள்ளையாகவும் செய்து கொண்டு விடலாம்" என்று சொல்லி வைத்தான்.

அங்ஙனமே (இறைவனாகிய) யாம், யூசுப் நபிக்கு, எகிப்து தேசத்தில் தகுதியான ஸ்தானத்தைத் தந்தோம். எமது பிரதான இலக்ஷியம் யாதெனில்: அவர்கட்கு (யூசுப் மூலம்) கனவின் பலாபலனைப் பற்றி கற்பிக்க வேண்டும் என்பதேயாகும்.

அல்லாஹ் (தஆலா) தன் நாட்டத்தின்படி சர்வ சக்தியும் (ஆற்றலும்) உடையவனாக இருக்கின்றான். இதை (மாந்தரில்) வெகுபேர் அறிய மாட்டேனென்கிறார்கள். (ஸூரா: யூசுப்; ருகூ: 2, 3.)

யூசுப் நபி மீது ஜுலேக்கா ராணியின் ஆசையும், அபவாதப் பழியும்!

அதே நிலையில் யூசுப் (நபி, பால்யப் பிராயம் முடிந்து, தக்க யௌவன) வாலிபத் தசையை அடைந்தார். மேலும் (இறைவனாகிய) யாம் அவருக்கு மிகுந்த (அறிவு) விவேகத்தையும், (சொர்ப்பன சாஸ்திர) ஞானத்தையும் அருள் பாலித்திருந்தோம். (உலகில்) நல்லோர்கட்கெல்லாம், நாம் இவ்வாறே நற்பயனை பலாபலனாக அளித்து வருகின்றோம்.

(ஒரு நாள்) யூசுப் இருந்து வந்த ஜாகையுள் ஜுலேக்கா (ராணி) பிரவேசித்து, அவருடன் தகாத முறையில் (இன்ப) சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள நாடினாள்; (முயற்சித்தாள்). எனவே கதவை உள்புறமாக அடைத்து மூடிக்கொண்டாள். "இப்போது என் அருகில் நெருங்கிவருக (வாலிபனே)!" என்று (வலிய) அழைத்தாள். அதை யுணர்ந்த யூசுப் "ஆண்டவன் காப்பானாக! (உன்னுடைய கண

வராகிய) அவர், என்னுடைய எஜமானர் ஆயிற்றே! அவருடைய (அன்பான) பொருட்டாலன்றோ, எனக்கு இங்கு நல்ல இடமும் (அந்தஸ்தும்) கிடைத்திருக்கிறது. (எனவே நான் அவருக்கு துரோகம் செய்ய மாட்டேன்; உன் இச்சையை பூர்த்தி செய்ய மாட்டேன்). ஏனெனில், அநியாய (அதர்மக் காரிய)ம் செய்பவர்களுக்கு நற்கதி கிடைக்க மாட்டாது'' என்று சொல்லி மறுக்கலானார். அந்த (அதிகார மமதை கொண்ட) ஸ்திரியோ, யூசுபுடன் (துர்க்கிருத்தியம் செய்தே தீருவதென்ற) உறுதிப்பாடு உடையவளாயிருந்தாள்.

அந்த சந்தர்ப்பத்தில் (நபி) யூசுபுக்கு, தன்னுடைய இறைவனிடமிருந்து நல்லத்தாக்ஷி (அருள்) கிடைத்தில்லாது போயிருந்தால், யூசுபும் (காமவலையில் சிக்கி) அந்தப் பெண்ணோடு துர்க்கிருத்தியத்தில் ஈடுபட்டே இருந்திருப்பார். இறைவனாகிய எமக்கு இதுவே இஷ்டமாயிருந்தது; அதாவது அவரைவிட்டும் தீமையையும் அவமானத்தையும் விலக்கிவைக்கவேண்டும் என்பதேயாம். வாஸ்தவத்திலேயே (நபி யூசுப்) அவர், எம்முடைய நல்லடியார்களில் (நபிமார்களில்) ஒருவராக இருந்தார்.

(ராணி ஜுலேக்காவும், அடிமை யூசுபும்) ஆக அந்த இருவரும், (இழுத்துக்கொண்டும் பறித்துக்கொண்டு மிருந்த முயற்சியில்) கதவின் பக்கம் ஓடினார்கள். (யூசுப் தப்பிவிடக்கூடாதென்று) அந்த ஸ்திரி, யூசுபுடைய அங்கியை பின்னால் பிடித்து இழுத்துக் கிழித்து விட்டாள். அந்தச் சரியான சந்தர்ப்பத்தில் (கதவும் திறக்கப்பட்டு) இருவரும் கதவருகில் இழு—பறியில் கிடப்பதை, அந்த ஸ்திரியின் கணவன், (பிரத்தியக்ஷமாய்) கண்டு கொண்டான். அந்த (சாகஸக்கார) ஸ்திரி, தன்கணவனைக் கண்டதும், (தற்காப்பு உபாயம் நிமித்தம்) "ஐயோ! உன்னுடைய மனைவியுடன் இவ்விதத் தகாத செயல் (பலாத்காரம்) புரியத் துணிந்த இப்படிப்பட்டவனைப் பிடித்து சிறைக்கூடத்தில் போடுவதைத் தவிர, அல்லது பயங்கரமான (மரண) தண்டனை கொடுப்பதைத் தவிர, இவனுக்கு வேறென்ன சிக்ஷை கொடுக்கப் போகிறீர்!'' என்று உறுத்திக் கூறினாள்.

அப்போது (நபி) யூசுப், (உண்மையில் நிகழ்ந்த விருத்தாந்தத்தை அந்த எஜமானனிடம் எடுத்துக் கூறி) "இந்தப் பெண்மணி தான் என்னை வலிய கெட்டசேர்க்கைக்காக அழைத்தாள்; (இழுத்தாள்)'' என்று முறையிட்டுக் கொண்டார். (பிறகு இந்த விவகாரம் ஆராய்ச்சியில் வைக்கப்பட்டது. விஷயம், அரண்மனைப் பெண்களிடமெல்லாம் பரவியது.) அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த (அனுபவசாலியான) ஒரு பெண்மணி, சாக்ஷியமாகச் சொன்னதாவது :—

"யூசுபுடைய (துணி) அங்கியானது, எதிர்புறத்தில் கிழிக்கப்பட்டிருப்பதாயின் பெண் பிள்ளை (ஜுலைக்கா) உண்மை கூறுபவளாகவும்ஆண்பிள்ளை (யூசுப்) பொய் சொல்பவராகவும் இருக்கவேண்டும்; அங்ஙன மின்றி, அவனுடைய சட்டைத்துணி பின் புறமாக (இழுத்து) கிழிக்கப்பட்டிருந்தால், பெண் (ஜுலேக்கா) பொய் சொல்பவளாகவும், ஆண் (யூசுப்) உண்மை உரைப்பவராகவும் இருக்கவேண்டும்" என்பதாகும்.

(இந்த அத்தாக்ஷி ஆதாரத்தின் பிரகாரம்) அந்தப் பெண்மணி (ஜுலைக்கா) வுடைய புருஷன் (அஜீஸ்), யூஸுபுடைய சட்டைத் துணி (அங்கி) பின்புறமாகவே கிழிந்திருக்கிற தென்பதை கண்டறிந்து, சொல்லலானார்:- ஓ! இது முற்றும் பெண் இனத்தாளின் சாகஸச் செயலாகவே இருக்கிறது. (ஏ, ஜுலைக்காவே), உன்னுடைய இந்த சாகஸம் மகாப் பெரும் தந்திரமாகவே இருக்கிறது" என்று (தீர்ப்புச்) சொல்லி விட்டான்; பிறகு (நிரபராதி) யூசுபை நோக்கி, "ஏ யூசுபே, (தயவு செய்து) நீர், இந்த விவகாரத்தை (மறந்து மன்னித்து) விட்டுவிட வேண்டும்" என்றார். (மேலும் ஜுலைக்காவை நோக்கி) "ஏ ஸ்திரியே! நீ, உன் பாபச்செயலுக்காக (யூசுபிடம்) மன்னிப்பு கேட்டுக் கொள்வாயாக. ஏனெனில் உண்மையில் நீயே குற்றவாளியாக இருக்கின்றாய்" என்றும்(தீர்ப்பு) கூறினார் (ஸூரா: யூசுப்; ருகூ: 3)

அறபு தஃலீமுல் புர்கான் பீ
எஸ்ஸர்னல் குர்ஆன்

இது சிறு குழந்தைகள் அரபி ஓத சுலபமாய் கற்றுக் கொள்ள, புதிய முறையில் எழுதியுள்ள அரபி காயிதா. இதில் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் அந்த பாடத்தைக் குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற ஒஸ்தாத்மார்களுக்கு குறிப்பும் அறபுத் தமிழில் போடப்பட்டுள்ளது. இதை அழகாக பெரிய எழுத்தில் எழுதி போட்டோ பிளாக்செய்து கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டு பாகங்களும் சேர்ந்தது. விலை அணா. 6
எஸ்ஸர்னல் குர்ஆன் லாகூர் ஸ்டைல் பெரியது அணா. 10
ஷை சிறியது விலை அணா. 6

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

87053

ஸீரத்துல் பாறூக்

இதாகிறது நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலீபாவாகிய உமர் இப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சாமார்த்தியங்களும், தீனில் வழுவாது நடக்கும் நீதிகளும் அடங்கி யிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட் டிருப்பதால் காமதை இங்கு விரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. இது இரண்டு பாகமாகும். முதல் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும், இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி யிருக்கின்றன.

இரண்டு பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3

கிபாயதுல் ஸாலிகீன் பீ தர்ஜுமத்தி ஹிகாயாதுஸ் ஸாலிஹீன்

இதுவாகிறது ஸாலிஹீன்களென்னும் மேன்மை தங்கிய ஸஹாபாக்கள் முதல் அவ்லியாக்கள் முதலான நாதாக்களின் ஹிக்காயத்துகள் என்னும் ஆகமத்தை பொதிந்தது. இதில் இருபது பாடங்கள் உண்டு. ஒவ்வொரு பாடத்திலும் பத்து பத்து ஹிக்காயத்துகளாக 200 ஹிக்காயத்துகள் அமைந்திருக்கின்றன. இந்த ஹிக்காயத்துகளைப் படிப்பதால் கல்பின் கறை நீங்கி, தெளிவு அதிகமாகிறது. ஸபறு ஷுஹது தவக்கல் ஸகாத்து முதலான நற்குணங்கள் குடிக்கொள்வதும் உண்டாகும்.

கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 2—8—0
ஷை அறபுத் தமிழ் கலிகோ பைண்டு விலை ரூ. 3—4—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

துப்பு துலக்கிய தூயவர்

1-வது அத்தியாயம்.

"மானிட மாசு போக்கும் மன்றம்" கற்பாறை போன்ற கருங்கல் கட்டிடத்தின் வாயிலில் வரைந்திருந்த வார்த்தைகள் இவை. சீர்திருத்த சிறைச்சாலே என்று அதற்கு அர்த்தம் கூறினர் சிறைப் பறவை சிப்கத்துல்லா. அப்துல் ஸலாம் (சாந்தி தாசன்) என்னும் பெயரைப்போல அந்த பெயரும் அர்த்தமற்றது. அப்துல் ஸலாம் என்னும் பெயருடையவர்களில் எத்தனே பேர் அப்து (அடிமை) ஆகவும் சலாம் (சாந்தி) ஆகவும் இருக்கின்றனர்! அதுபோல் இதுவும் மானிட மாசுதனே போக்கவில்லே; மன்றமாகவும் அமையவில்லே. அப்துல் ஸலாம் என்னும் பெயர் தாங்கியவர்களில் அநேகர்—பெயருக்குப் பொருத்தமில்லாத வகையில்—முரடர்களாகவும் மூர்க்கர்களாகவும் இருப்பது போல, 'மானிட மாசு போக்கும் மன்றம்' என்ற பெயர் பெற்ற இந்த நிலேயமும் மாநில மாந்தர்களிடமிருந்து மாசு களேந்து மாண்புறு மனிதர்களாக ஆக்கும் மன்றமாக அமையாமல், கொலே, கொள்ளேகளும் அக்கிரம, அட்டூழியச் செயல்களும் அதிகரிப்பதற்கேற்ற வசதி, வாய்ப்புகளேயும் சூழ் நிலேயையும் தோற்றுவிக்கும் ஸ்தலமாகத் திகழ்ந்தது.

தினந்தோறும் அவரும் அவரது அத்யந்த நண்பன் அஹ்மது ஷரீபும் செங்குத்தான மலேச்சரிவு வழியாக கனத்த கை வண்டியை இழுத்துச் சென்று வந்திருக்கின்றனர்; ஒவ்வொரு நாளும் கருந்தாடி காவல்காரன் அழகிய அலிகர் பூட்டில் சாவியிட்டுத் திருகி கதவுகளேத் திறந்து விடுவதும் முன்பக்கமும் பின்புறமும் ஆயுதபாணி வீரர்கள் நிழல்போல பின் தொடர்ந்துவர அவர்கள் வெளியே செல்வதும் உடனே கதவுகள் மீண்டும் மூடப் பெறுவதும் சர்வசாதாரண நிகழ்ச்சிகள்.

4 மணிக்கு வாயில் கதவு திறக்கப்பட்டு கை வண்டி உள்ளே அனுமதிக்கப் பெறும் போது அவர் வில்விளேவுக்கு நடந்து வந்து தங்கியிருந்திருக்கிருர்.

ஒவ்வொரு கட்டிடமும் பயங்கரமான வகையில் பழக்கமாகி விட்டிருந்தது. தாழ்ந்த கூரையுள்ள அலுவலகமும் தகர்க்க முடியாத மண்டபங்களும் துணி துவைக்கும் ஸ்தலமும் ரொட்டிக் கிடங்கும் பாழடைந்த பள்ளிவாசலும் வார்டர்களுக்கான உயர்ந்த ஆச

னங்களைக் கொண்ட நீண்ட கட்டில்களும் கப்ருஸ்தானும் பார்த்துப் பார்த்துப் பழசாகி விட்டன.

கோடைக் காலத்தில் ஒரு நாள் காலை கஷ்ட உழைப்பாளி கோஷ்டியொன்றுடன் வாயிலைவிட்டு அவர் வெளியே சென்றார். அவர்கள் ஒரு 'ஷெட்' கட்டி வந்தனர்; அவர் கொல்லனின் உதவி யாளர் என்ற அந்தஸ்தையும் பொறுப்பையும் மேற்கொண்டிருந்தார். அவர் அந்த வேலையை நேசித்தார்; வம்பளப்பதற்கு வசதியும் வாய்ப் பும் இருந்ததே இதற்குக் காரணம். கள்ள கோட்டு தயாரிக்கும் கைதேர்ந்த பேர்வழியைப் பற்றிய விஷயங்களைக் கேட்டறிவதில் அவர் ஆர்வம் காட்டினர்.

சாக்குப்பை போர்த்திய செங்கல் குவியல் மீது உல்லாசமாக உட்கார்ந்திருந்த வார்டர் சொன்னன்: "இன்று அதிகப் பேச்சு கூடாது". "சரி" யென சம்மதித்தான் ஷரீப்.

ஜீவிய காலத் தண்டனை பெற்று அனுபவித்து வருபவனும் ஐம்பது வயது அடைந்தவனுமான அவன் அறிவுள்ளவன். மற் ெறாரு 'வாய்ப்பு' கிடைக்கும்வரை ஜீவித்திருக்க வேண்டு மென்பது தான் அவனது அவா, அபிலாஷை ஆகும்.

சாவகாசமாகச் செங்கல் அடுக்கிய வண்ணம், "ஆனல், பகற் கொள்ளையல்ல; வயோதிக கரீம் ஷரீபுக்குத் தண்டனை கிடைக்கச் செய்த துப்பாக்கிச் சுடுதல் சம்பவமுமல்ல; உனக்கு தண்டனை வாங்கித்தந்த பந்தயக் குதிரை 'பர்ஸாத்' மோசடியும் அல்ல." என்றான் அவன்.

"பந்தயக் குதிரை 'பர்ஸாத்' மோசடியால் எனக்குத் தண் டனை கிடைக்க வில்லை. பந்தயத்துக்கு ஓடிச் சென்ற போது 'பர்ஸாத்' விஷயத்தில் படுமோசம் செய்யப்பட்டிருக்கிற தென்ப தும் உண்மையில் அது வேறு குதிரை யென்பதும் எனக்குத் தெரி யாது. 'பர்ஸாத்' தை பணயமாக வைத்து என்னை அவர்கள் மடக்கி விட்டார்கள்; ஆனல் இவ்விஷயத்தில் நான் புகார் எதுவும் கூற வில்லை" என்று சிறைப் பறவை சிப்கத்துல்லா சினமும் சீற்றமும் கொள்ளாமல் அமைதியாகப் பதில் அளித்தார்.

அஹ்மத் ஷரீப் அவரைத் திருப்தி செய்யும் வகையில் சொன் னன் "நீ நிரபராதி என்பது எனக்குத் தெரியும்; ஒவ்வொருவனும் அப்படித்தான். சிறையிலடைபட்டிருப்போரில் நான் ஒருவன்தான் குற்றவாளி என்று கவர்னர் கருதுகிறார். சமய சந்தர்ப்பங்களுக்குப் பலியாகாத குற்றமுள்ள ஒருவனைக் காண்பதில் எனது உள்ளம் உவகை யடைகிறது."

அவ்வளவோடு விஷயத்தை விட்டு விட்டார் சிப்கத்துல்லா. அவர் அவ்வாறு இருந்ததற்கு நியாயம் இல்லாமலில்லை. இந்த உண்மை மறுக்கமுடியாதது. குதிரைப் பந்தய மோசடிகள் பல

அவருக்கு நன்கு தெரியும்; 'மோசம்' போன குதிரைகள் மீது பணயம் வைத்தவர்கள் பலருடன் அவர் தோழமை கொண்டிருந்தார். மூன்று வருட சிறைத் தண்டனையை முணுமுணுப்போ அல்லது அப்பீலோ இன்றி அவர் ஏற்றுக்கொண்டிருந்தார். அவர் மீது சுமத்தப் பெற்ற குற்றத்தை அவர் செய்திருந்தமையால் இந்த போக்கு அவர் அனுஷ்டிக்கவில்லே. குற்றமிழைக்காவிடினும் குற்றவாளிகளோடு சேர்ந்து அவர் சிறை வாசம் அனுபவித்து வந்தமைக்கு நல்லதொரு காரணம் இருக்கத்தான் செய்தது.

அஹ்மது ஷரீப் அமைதியாகச் சொன்னான்: "உன் மீது அவர்கள் அபாண்ட பழி சுமத்தினார்களாயின், நீ 'வாயில்லா பிராணி' யாக இருந்தமையே அதற்குக் காரணம். வையத்தில் வாயில்லாப் பிராணிகள் இருப்பதே இதற்குத்தான்: இல்லாத பொல்லாத பழிகளைச் சுமப்பதற்குத்தான். கரீமுல்லா கான் என்ன சொன்னார்?"

"கண்ணிய மிகு கரீமுல்லா கானை நான் காணவில்லை." என்று சிப்கத்துல்லா சுருக்கமாகச் சொன்னார்:

"நீ ஒரு வாயில்லாப் பிராணி என அவர் அபிப்பிராயப்படுகிறார் போலும்!—வாயை மூடு! செங்கல் எடு! அந்த 'வேட்டைகாய்' வந்து கொண்டிருக்கிறது" என்று அஹ்மது ஷரீப் அறிவித்தான்.

வேறு வார்டர்களைவிட 'மோப்பம்' பிடிப்பதில் இந்த வேட்டை நாய், அதிக ஆர்வம் காட்டியது கிடையாது. கைதிகளிடம் குற்றம், குறைபாடுகளைத் தேடிக்கண்டு பிடித்து அவர்களுக்குத் தண்டனை கிடைக்கச் செய்வதையே நோக்கமாகவும் தொழிலாகவும் கொண்டிருந்தமையால் வார்டர்களை வேட்டை நாய்கள் என வெறுத்தனர் கைதிகள்.

"அதிகப்பேச்சு கூடாது" என்று இயந்திரம் போல இயம்பினான் அவன்.

தாழ்ந்து பணிந்து பதிலளித்தான் அஹ்மது ஷரீப், "செங்கல் எடுத்துத் தருமாறு தான் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். சென்ற தடவை வந்த செங்கற்களை விட இவை மட்டரகமானவை"

அரை செங்கல் எடுத்து, அதனைச் சோதித்துப் பார்த்து வார்டன் சொன்னான். "அதனை நான் கவனித்திருக்கிறேன்"

பிரமிப்பும் பீதியும் அடைந்த தோரணையில் அஹ்மது ஷரீப் சொன்னான், "நீங்கள் அதனைக் கவனித்திருப்பீர்களென நம்புகிறேன்"

வந்த வழியே வார்டர் சென்றதும், அஹ்மத் ஷரீப் பின்வருமாறு அபிப்பிராயம் தெரிவித்தான். மூண்டைக்கண் படைத்த அம் முண்டத்துக்கு செங்கல்லுக்கும் செம்மண்ணுக்கு முள்ள வித்தியாசம் தெரியாது. வயோதிக கரீம் ஷரீப் இங்கிருந்தபோது இவ

னுக்கு 'சோப்' போட்டு வைத்திருந்தான். ஒவ்வொரு நாளும் அந்தக் கைதிக்கு இரகசியமாகக் கடிதங்களைக் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தனர். ஆனால் வயோதிக கரீம் ஷரீபிடம் பணம் இருக்கிறது. 'ஈட்டி எட்டினவரை பாயும், பணம் பாதாளம் வரை பாயும்' என்பது முதுமொழியல்லவா? பணம் படைத்தோர் பாருலகில் நினைத்தவற்றைச் சாதிக்க முடிகிறது. வயோதிக கரீம் ஷரீபும் கரீமுல்லா கானும் சேர்ந்து 'கனீமா' என்னும் கப்பலைக் கொள்ளையிட்டு பத்து லட்சம் ரூபாய் சேர்த்துக் கொண்டார்கள். கண்ணிய மிகு கனவான் போல வாழும் கரீமுல்லாவை அவர்கள் பிடிக்கவில்லை. ஆனால் கரீம் ஷரீப் கொலை செய்தபொழுது கையுங்களவுமாக அகப்பட்டு கொண்டான். கரீம் ஷரீபின் கதையைக் கணக்கின்றி கேட்டு காது 'காப்பு' காய்ச்சி விட்டது. ஆனால் அஹ்மது ஷரீப், ஒவ்வொரு கதையையும் புத்தம் புதிய தென்ற தோரணையில் பேசும் பாண்மை பெற்றிருந்தான்.

அஹ்மது ஷரீப் அளந்து கொட்டினான்: கரீமுல்லாகானை அவன் வெறுப்பதன் காரணம் இதுதான். வயோதிக கரீம் ஷரீபும் அவனது மைந்தன் வாலிப காதர்கானும் அவரைப் பிடித்துக் கொடுப்பதற்கு முயற்சிப்பதன் காரணமும் இதுதான். வாலிப காதர் கான் வாளாவிருக்கமாட்டான். முப்பது வயதடைந்த அவன் அவனியில் மாபெரும் கள்ள நோட்டு தயாரிப்பாளன் ஆவான். அது சாதாரண சாமானிய நோட்டு அல்ல. அவனது நோட்டுக்களைக் காணும்போது நிபுணர்கள் கூட நிலைதடு மாறுகிறார்கள்—"ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா" நோட்டுக்கும் அதற்கும் வேறுபாடு காண்பதரிது. பல்லாண்டுகளாக கள்ளநோட்டுத் தயாரிப்பாளனைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று கங்கணம்கட்டி யுள்ள போலீஸாரும் இரகசிய போலீஸாரும் அவனைப்பிடிக்க முடியாதிருந்து வருகின்றனர்.

வெப்பம் தாங்கமுடியாதிருந்தது. ஆகவே, அஹ்மது ஷரீப் பச்சை, நீல கோடிட்ட சட்டையைக் களைந்தெரிந்து விட்டான். மற்றவர்களைப் போல அவனும் 'சாரம்' உடுத்து, சக்குபாய் நிற சட்டை தரித்தான். அவனது சட்டை முரட்டுப் பஞ்சினால் செய்யப் பெற்றது. அரபு எழுத்துக்கள் சில பொறிக்கப்பெற்ற தொப்பியும் அவன் அணிந்திருந்தான்; இந்த வினோத எழுத்துக்கள் அவன் சிறையில் அடைபட்டிருந்த வருடங்களைக் குறிப்பிடுவனவாக விருந்தன. ஒரு வாரம் கழித்து, இந்த எழுத்துக்கள் எடுத்து விடப்பட்டதும் அவன் அவமானம் அடைந்தான்; ராணுவ வீரனொருவனிடமிருந்து ராணுவ பதக்கங்களைப் பிடுங்கிக்கொண்டால் அவனுக்கு ஏற்படுவதைப் போன்ற ஏமாற்ற உணர்ச்சி, ஏக்க நிலை இவனுக்கும் ஏற்பட்டது. எனினும் "செங்கோலுக்கு முன் சங்கீதம் என்ன செய்யும்? சிறை விதிகளை அவனால் என்ன செய்யமுடியும்?"

கொல்லரில் சிமெண்ட் எடுத்து, செங்கல்மீது சாவகாசமாகப் பூசிக்கொண்டே அவன் வினவினுன்:—நீ இது வரை வாலிப காதர்கானைக் கண்டதில்லையா ?

"அவனை நான் பார்த்திருக்கிறேன்; ஆனல் அவனுடன் பழக வில்லை" என்று சிப்கத்துல்லா தெரிவித்தார். அவர் பேசிய தோரணையினின்று ஏதோ விஷயம் இருக்க வேண்டு மென்று அவரை அஹ்மது ஷரீப் நிமிர்ந்து பார்த்தான்.

"என்னை அவன் காட்டிக் கொடுத்து விட்டான்" என்று சிப் கத்துல்லா தெரிவித்ததும், ஆச்சரியத்தால் அஹ்மது ஷரீப் தலை அசைத்தான்.

சிப்கத்துல்லா தொடர்ந்து பேசினர்: "ஏன் என்று எனக்குத் தெரியாது. பந்தயக் குதிரை 'பர்ஸாத்' மோசடியில் பங்கு கொண்ட வன் அவன்; பந்தய மைதானத்துக்கு குதிரையை ஓட்டிச் செல்லு மாறு என்னைத் தூண்டி, கடைசியில் காட்டிக் கொடுத்து விட்டான். அது வரை 'பர்ஸாத்' என்றழைக்கப்பட்ட பந்தயக் குதிரை உண் மையில் பரீத் என்பதும் வெகு தந்திரமாகவும் சாமார்த்தியமாகவும் இது மறைக்கப்பட்டிருந்தது என்பதும் எனக்குத் தெரியாது"

அதிர்ச்சியுற்ற அஹ்மது ஷரீப் சொன்னுன்: காட்டிக் கொடுத்த கயவனு காதர்கான்? அவன் ஏன் அவ்வாறு செய்தான்? பண விஷய மாக அவனுக்கு நீ ஏதாவது இடைஞ்சலாக இருந்தாயா?

சிப்கத்துல்லா தலை அசைத்தார். "எனக்குத் தெரியாது. கரீமுல்லாகானிடம் அவன் விரோதமும் குரோதமும் கொண்டிருக் கிருனென்பது உண்மையானல், அவரிடம் நான் நேசமும் பாசமும் கொண்டிருக்கிறே னென்பதை யறிந்து பழிவாங்கும் மனேபாவத் துடன் அவன் அவ்வாறு செய்திருக்கலாம். எனினும் கரீமுல்லா கானிடன் நான் மிகுந்த நேசம் கொண்டிருக்கிறேன். கயவர்களோடு கலந்துறவாடுவதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை அவர் எச்சரித்திருந் தார். பெரியோரின் பொன்மொழியைப் பொருட்படுத்தா திருந்ததன் விளைவு இது."

"பேச்சை நிறுத்துகிறீர்களா? இல்லையா"—சீறினுன் சிறை வார்டர்.

அமைதியாக அவர்களிருவரும் சிறிது நேரம் வேலை செய்தனர்; பின்னர், வழக்கமான சம்பாஷணை தொடர்ந்தது.

"அந்த வேட்டை நாய் என்ருவதொரு நாள் எவனையாவது தூக்கிலிட்டு விடுவான்."

மாலை 4 மணிக்கு உழைப்பாளி கோஷ்டி அணிவகுத்து நின்றது; குறுகிய ரஸ்தா வழியாகச் சிறைச்சாலைக்குள் கைதிகள் விரட்டப்பட்டனர்.

187053

“மானிடமாசு போக்கும் மன்றம்.” வில் வளைவு மீது பொறித்திருந்த இந்த வினோத வார்த்தைகளைக் கண்டு கண் சிமிட்டினார் சிப்கதுல்லா. அந்த பெயர்ப் பலகையும் அவரைக் கண்டு கண் சிமிட்டுவதாக அவருக்குத் தோன்றியது. 4-30 மணிக்கு இரும்புக் கிராதி போடப்பெற்ற இருட்டறைக்குள் அவர் பிரவேசித்தார்; பின்னர் கதவு பூட்டித் தாளிடப் பெற்றது.

அந்த பெரிய நிலவறையில் மடக்கி வைக்கப் பெற்றிருந்த ஜமக்காளம் ஜகஜ்ஜோதியாகக் காட்சி யளித்தது. ஒரு மூலையிலிருந்த அலமாரியில் அவரது வளர்ப்பு நாயின் புகைப்பட மொன்று காணப் பட்டது.

ஒரு குவளையில் தண்ணீர் வார்த்து அவர் குடித்தார். ஜன்னல் கிராதி வழியாக அவர் எட்டிப் பார்த்தார். வெகு சீக்கிரம் அவருக்கு தேநீர் கொண்டு கொடுக்கப்படும்; பிறகு, பதினெட்டரை மணி நேரம் வரை பூட்டு திறக்கப்படாது. இந்த நீண்ட நேரத்தை அவர் எவ்வாறு செலவிடுவது? விளக்கு அணைக்கப்படும் வரை, விருப்ப மிருந்தால், தன்னிட மிருந்த பிரயாண சம்பந்தமான புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கலாம்; அல்லது பலகையில் பலவற்றையும் எழுதிக் கொண்டிருக்கலாம்; குதிரை, நாய், படம் வரைந்து கொண்டிருக்கலாம், அல்லது கணக்குப் போடலாம் கவிதை புனையலாம், அல்லது சிந்தித்த வண்ண மிருக்கலாம்.

எல்லாவற்றிலும் இழிந்த பயிற்சி அது தான். நிலவறையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்து புகைப்படத்தைக் கையிலெடுத்துக் கொண்டார். கைபட்டு அட்டை அழுக்கடைந்து அலங்கோல நிலையில் இருந்தது. நாயின் கூரிய கண்களை அவர் புன்னகையோடு பார்த்தார்

“நீ எழுத முடியாம லிருப்பது பரிதாபத்துக்குரியது”—அவர் நினைத்தார்.

(தொடரும்.)

உர்து வலீஸ் காயிதா

இது உர்து கற்றுக் கொள்வதற்கு சுலபமான பாலர் பாடம். இதில் படங்களைக் கொண்டு இலகுவாய் குழந்தைகள் உர்து வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள புதிய முறையில் போடப்பட்டுள்ளது. இரண்டு கலர்களில் அச்சிடப்பட்டது.

இதன் விலை அணா. 5

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

இஹ்யா உலூமுத்தீன்
மொழி பெயர்ப்பு

புதிய இரண்டாம் பதிப்பு

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இமாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப் படுத்துவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞானமார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலூமுத்தீன் ஆகும். அரபு உர்தூ தெரியாத தமிழ் முஸ்லிம்களும், இஸ்லாமிய அனுஷ்டானத்தத்துவ ஞானங்களையும், இக்கிதாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகீகத் என்னும் நான்குவித மார்க்கங்களும் விளக்கப்பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம், அகீதா, ஹதீஸ், தலீல் முதலிய ஆதாரங்களோடு, இஸ்லாம் மதானுஷ்ட சட்டதிட்ட பர்லு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ருஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்களெல்லாம் இந்நூலின் கண், மிகத் துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச் சொல்லித் தெரியக் கூடியதில்லை. இந்த நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரியவரும்.

கெடு காட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சாயிருப்பதால் பிரதிகளுக்கு ஆடர் தாமுந்திக் கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ. 5—0—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

காஜா நிஜாமுத்தீன் அவ்லியா ஜீவிய சரித்திரம்

நம் பாரத தேசத்தின் தலை நகராகிய டில்லி (தெஹ்லி) மாநகரத்தில் அடங்கியிருக்கும் சுல்தானுல் மஷாயிக், க்வாஜா, நிஜாமுத்தீன் அவ்லியா (குத்திஸ ஸிர்ருஹு) அவர்களின் மகாத்மியம் மகத்தானது. முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதார்களுங்கூட, ஆண்டுதோறும், நிஜாமுத்தீன் 'தர்காஹ்' வுக்கு விஜயம் செய்து நற்பயன் அடைந்து செல்கிறார்கள்.

இத்தகைய மகானின் பிறப்பு, படிப்பு, பயிற்சி, தியானம், வணக்கம், சத்திய போதனை, நற் பிரசாரம், போராட்டம், வெற்றி முதலிய விஷயங்கள் சுருக்கமாகவும் விளக்கமாகவுமுள்ள ஜீவிய சரித்திரம் இது. ஒவ்வொருவரும் படித்துணர வேண்டிய ஞான நூல். இதன் விலை அணா. 8

முதல்லல் கோஷா நாமா

(புதிய பதிப்பு)

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயகமவர்களின் திருமொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளைக் கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும், முபஸ்ஸிரீன்களும், முஜ்தஹிதீன்களும் தெண்டித்து விபரித்தெழுதியிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித்தெழுதி முதல்லல் கோஷா நாமா வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வையிட்டு அச்சிடப் பட்டது. இவைகளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 12

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ், 5.